Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

THURSDAY, SEPTEMBER 23, 2021

வியாழக்கிழமை செப்டெம்பர் 23, 2021 | ஒளி: 07 கதிர்: 108 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

## புத்தகசாலைகளை திறக்க அனுமதிக்கவும்



தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமலில் இருக்கும் காலப்பகுதியில், சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைய, பொதுச் சுகாதார பிரிவினரின் கண்காணிப்பின் கீழ், புத்தகசாலைகளை திறப்பதற்கு அனுமதியளிக்குமாறு பொலிஸ் மா அதிபர் தொடர்ச்சி P2

### ஞானசார தேரரின் 'சூத்திரதாரி' கருத்தால் சர்ச்சை

# ஐ.எஸ் சிந்தனை வெடிக்கும்

**வஹாப் வாதம், இஸ்லாமிய இராஜ்ஜியம் ஆகியனவே இறுதியில் பயங்கரவாதமாக மாறுகிறது**



பா.நிரோஸ்

நியூஸிலாந்து பொலிஸாரால் விடுதலை செய்யப்பட்ட ஒருவரே, மீண்டும் தாக்குதல் நடத்தியுள்ளார். அவரிடம் ஐ.எஸ் சிந்தனை இருந்திருக்கிறது. ஒவ்வொரு முஸ்லிம்களிடத்திலும் ஐ.எஸ் சிந்தனை இருக்கும். யாரிடம் இருக்கிறது; யாரிடம் இல்லையெனக் கண்டறிய முடியாது எனத் தெரிவித்த பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் அட்மிரர் சரத் வீரசேகர, ஐ.எஸ் சிந்தனை, எப்போது வேண்டுமானாலும் வெடிக்கலாம் என்றார்

மீண்டுமொரு பயங்கரவாதத் தாக்குதல் நாட்டில் இடம்பெறுமென ஞானசார தேரர் கூறியிருக்கும் கருத்துத் தொடர்பில், அவரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். தொடர்ச்சி P2

# முஸ்லிம்களின் மனம் புண்பட்டுள்ளது

**இதுபோன்ற கருத்துக்களால் நாட்டுக்கு சுற்றுலாத் துறையினர், முதலீட்டாளர்கள் வருவார்களா?**



நான் வஹாப்வாதி அல்ல; இஸ்லாமில் வஹாப் வாதம் இல்லை. முஸ்லிம் மதத் தலைவர்களுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தியிருக்கும் ஞானசார தேரருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுமா என வினவிய ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான், உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களின் பிரதான சூத்திரதாரி நபி அவர்கள் எனக் கூறியமையால் உலகளாவிய ரீதியில் வாழும் முஸ்லிம்களின் மனம் புண்பட்டுள்ளது என்றார்.

நாட்டில் மீண்டும் ஒரு பயங்கரவாதத் தாக்குதலை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக பொதுபல சேனாவின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் தெரிவித்துள்ளார். தாக்குதலை நடத்தப்போகும் குழுவையும் தனக்குத் தெரியும் எனவும், எந்தநேரத்திலும் தாக்குதலை மேற்கொள்ள அக்குழு தயாராக உள்ளதாகவும் அவர் கூறியிருக்கின்றார் என முஜிபுர் ரஹ்மான் எம்.பி தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## ஞானசாரரின் கூற்றை கண்டித்தார் சாணக்கியன்



உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களின் பிரதான சூத்திரதாரி இஸ்லாமியர்களின் கடவுளான அல்லாஹ் என பொதுபலசேன அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தெரிவித்துள்ளார் எனத் தெரிவித்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் எம்.பியான இராசமாணிக்கம் சாணக்கியன், ஆளும் தரப்பில் இருக்கும் முஸ்லிம்களும், 20ஆவது திருத்தத்துக்கு கைகளைத் தூக்கியோரும் மௌனமாக இருக்கின்றனர் எனக் குற்றஞ்சாட்டினார்.

தொடர்ச்சி P2



## 40 தொழிற்சங்கங்கள் 1 மணிநேரம் எதிர்ப்பு

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து 40 சுகாதார தொழிற்சங்கங்களால் நாடளாவிய ரீதியிலுள்ள வைத்தியசாலைகளில் எதிர்ப்பு நடவடிக்கை, நண்பகல் 12 மணி முதல் 1 மணி வரை முன்னெடுக்கப்பட்டது.

கொரோனா விசேட கொடுப்பனவு இடைநிறுத்தப்பட்டமை, சுகாதார ஊழியர்களுக்கு தேவையான போதியளவு உபகரணங்களை வழங்காமை உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை முன்னிறுத்தி இந்த எதிர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

தொடர்ச்சி P2

## வீடுகளில் சிகிச்சை பெறும் எவரும் மரணிக்கவில்லை

**12,284 மரணங்கள்; 5,07,330 நோயாளர்கள்**

நாட்டில் பதிவான கொரோனா மரணங்களின் எண்ணிக்கை, 21ஆம் திகதிய அறிக்கையின் பிரகாரம் 12,284 ஆக அதிகரித்துள்ளது எனத் தெரிவித்த சுகாதார அமைச்சு, வீடுகளில் சிகிச்சை பெறும் முறைமையின் கீழ் எந்தவொரு நோயாளரும் மரணிக்கவில்லை எனத் தெரிவித்துள்ளது.

நாட்டில் பதிவான கொரோனா மரணங்களின் எண்ணிக்கை 12,284 ஆக அதிகரித்துள்ளது. 21ஆம் திகதிய அறிக்கையின் பிரகாரம், 66 கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளன. அதில், 36 பெண்களும் 30 ஆண்களும் அடங்குகின்றனர்.

இதனிடையே, கொரோனா தொற்றுக்குள்ளான 1,321 பேர், அன்றையதினம் (21ஆம் திகதியன்று ) அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2



## சஹ்ரான் மனைவியின் விளக்கமறியல் நீடிப்பு

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களின் தலைவரென அறியப்பட்ட தற்கொலைதாரி சஹ்ரான் ஹாசீமின் மனைவியின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## வல்வெட்டித்துறை நகரசபை: ஆட்சியை இழந்தது கூட்டமைப்பு

**கூட்டமைப்பின் சார்பான உப தவிசாளர், சுயேட்சைக் குழுவுக்கு சார்பாக வாக்களித்தார்**

எம்.றொசாந்த், எஸ். நிதர்ஷன், எஸ். தில்லைநாதன்



வல்வெட்டித்துறை நகர சபையின் சுயேட்சை குழுவின் உறுப்பினர் சபாரத்தினம் செல்வேந்திரா, ஒரு மேலதிக வாக்கினால் வெற்றிபெற்று, வல்வெட்டித்துறை நகர சபை தவிசாளராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

வல்வெட்டித்துறை நகர சபை தவிசாளர் தெரிவு அமர்வு, நேற்று (22) முற்பகல் 10 மணிக்கு, நகர சபை மண்டபத்தில், வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ம.பற்றிக் டிரஞ்சன் தலைமையில் நடைபெற்றது. தொடர்ச்சி P2



## தமிழ் அரசியல் கைதிகளுக்கு நடந்தது அவமான செயல்

**சபையில் மன்னிப்பு கேட்டது அரசாங்கம்**

பா.நிரோஸ்

அநுராதபுர சிறைச்சாலை சம்பவம் தொடர்பில் நீதி அமைச்சர் அலி சப்ரி பாதிக்கப்பட்ட தமிழ் அரசியல் கைதிகளிடம் பகிரங்கமாக மன்னிப்புக்கோரியுள்ளதோடு, இச்சம்பவம் அவமானமான ஒன்று எனவும் இதனை தான் கண்டிப்பதாகவும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## கொல்லப்பட்டவர்களுக்கு மரண சான்றிதழ்: கொன்றவர்களுக்கு என்ன தண்டனை

பா.நிரோஸ்



காணாமல் போனவர்களுக்கு மரண சான்றிதழை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கொடுப்பார் என்றால், அவர்களைப் படுகொலை செய்தவர்களுக்கு என்ன தண்டனை வழங்குவார் என தொடர்ச்சி P2

## காணாமல் போனவர்கள் பற்றி மறைப்பதற்கு ஒன்றும் இல்லை

மகேஸ்வரி விஜயனந்தன்



இலங்கையில் இறுதி யுத்தத்தில் காணாமல் போனவர்கள் தொடர்பில் மறைப்பதற்கு ஒன்றும் இல்லை எனத் தெரிவித்த அமைச்சரும் அமைச்சரவை பேச்சாளருமான டலஸ் அழகப்பெரும, இலங்கையர் என்ற ரீதியில், மீண்டும் இவ்வாறான துர்ப்பாக்கிய தொடர்ச்சி P2

## கடன்பெறும் எல்லை 3,937 பில்லியனாக அதிகரிப்பு

அரசாங்கத்தின் கடன் பெறும் எல்லையை 2,997 பில்லியனில் இருந்து மேலும் 400 பில்லியனால் அதிகரிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இதற்கமைய, கடன் பெறும் எல்லையை 3, 937 பில்லியனாக அதிகரித்து ஒதுக்கீட்டு சட்டத்தை திருத்துவதற்கு நிதியமைச்சர் முன்வைத்த யோசனைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## லொஹான் விவகாரத்தை விசாரிக்க நீதிபதி

மகேஸ்வரி விஜயனந்தன்

அரசாங்கத்தின் செயற்பாடுகள் மக்களின் நம்பிக்கையிலேயே காணப்படுவதாகவும், மக்களின் அந்த நம்பிக்கையைப் பாதுகாப்பது மக்கள் பிரதிநிதிகளின் பொறுப்பு எனத் தெரிவித்த அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான டலஸ் அழகப்பெரும, அண்மையில் சிறைச்சாலைக்குள் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் அரசாங்கம் சரியான தீர்மானத்தை எடுக்கும் எனத் தான் நம்புவதாகத் தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (22) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில், ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு தொடர்ச்சி P2

## காரில் தொற்றிய பொலிஸ் அதிகாரியை காருடன் இழுத்துச் சென்ற இருவர் கைது

**ஓட்டோ சாரதிக்கு வலை: காரும் சிக்கியது**

ஹெரோய்ன் போதைப்பொருள் கடத்தலை முறியடிப்பதற்காக, போதைப்பொருள் கடத்தல்காரர்கள் இருந்த காரின் பொனட்டில் தொற்றிக்கொண்ட பொலிஸ் அதிகாரியை காருடன் இழுத்துச் சென்ற இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அந்த அதிகாரி, காரின் பொனட்டில் தொங்கியிருந்த நிலையில், சுமார் 1 கிலோமீற்றர் தூரம் இழுத்துச் செல்லப்பட்ட இந்தச் சம்பவம், கடந்த 20ஆம் திகதியன்று இராஜகிரிய - ஒபயசேகரபுர பகுதியில் இடம்பெற்றுள்ளது.

காரின் பொனட்டிலிருந்து கீழே வீசப்பட்டு வீழ்த்தப்பட்ட அந்தப் பொலிஸ் அதிகாரி காயங்களுடன் பொலிஸ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்

# ஐ.எஸ் சிந்தனை வெடிக்கும்

பாராளுமன்றத்தின் நேற்றைய அமர்வின் சபை ஒத்திவைப்பு வேளையில், ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபூர் ரஹ்மானின் கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஞானசார தேரரினால் கூறப்பட்ட குழுவைச் சேர்ந்த எவரும் இதுவரையில் கைது செய்யப்படவில்லை. இதனை நாம் ஆழமாக பார்க்க வேண்டும். அல்குரானில் குறிப்பிடப்பட்டுள்ள வசனங்களை மேற்கோள்காட்டியே அவர் தாக்குதல் தொடர்பில் ஊடகம் ஒன்றுக் கருத்துத் தெரிவித்துள்ளார் என்றார்.

தௌஹீத் ஜமாத் அமைப்பால் கடந்த 2015ஆம் ஆண்டு சிங்கள மொழியில் மொழிப்பெயர்ப்பு செய்யப்பட்ட அல்குரானில் கொலை, சூழ்ச்சி, திட்டமிடல் தொடர்பில் கூறப்பட்டுள்ள விடயங்கள் தவறென எந்தவொரு முஸ்லிம் தலைவர்களும் இதுவரையில் கூறவில்லை எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

வஹாப் வாதம், இஸ்லாமிய இராஜ்ஜியம் ஆகியனவே இறுதியில் பயங்கரவாதமாக மாறுகிறது. இஸ்லாமிய இராஜ்ஜியம் என்பது ஒரு கொள்கையாக இருக்கிறது. இது நபர்களின் மூளையிலேயே உள்ளது. இந்த கொள்கைளை கொண்டவர்கள் யார் என்பது இனங்காண முடியாது. இதனால் இவர்களை கைது செய்வதில் சிரமம். இந்த கொள்கையை கொண்ட பலர் நாட்டில் இருக்கலாம். இதுபோன்ற கொள்கைகளை போசிக்கும் விடயங்கள் மத புத்தகங்களில் இருந்தால் அவற்றை நீக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

ஒரேநாடு ஒரே சட்டம் என்றால் ஒவ்வொரு மதத்துக்கும் ஒவ்வொரு சட்டம் நாட்டில் இருக்க முடியாது. உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலுக்குப் பின்னர் வஹாப், ஐ.எஸ் போன்ற கொள்கைகளை பின்பற்றுபவர்களே தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

ஷங்கிரில்லா ஹோட்டலில் தாக்குதலை நடத்தியவர்கள் இருவரும் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பை முடித்தவர்கள். இவர்கள் போன்றவர்களே 72 கண்ணிகள் போன்ற கதைகளை நம்பி ஐ.எஸ் கொள்கைகளில் ஈர்க்கப்பட்டார்கள் என்றால், சாதாரண முஸ்லிம் இளைஞர்கள் இந்த கொள்கைகளுக்கு ஈர்ப்பது அவ்வளவு சிரமமானதல்ல எனவும் அமைச்சர் கூறினார்.

அடிப்படை வாதிகள் தொடர்பில் முதலில் மக்களை தெளிவுப்படுத்தியது ஞானசார தேரரே. எனினும் அவரை இனவாதி என குற்றம் சுமத்துகிறார்கள். பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பில் நாட்டு மக்களுக்கு அறிவித்த ஞானசார தேரருக்கு தான் நன்றிகளை சொல்வதாகவும் அவர் இதன்போது தெரிவித்தார்.

# முஸ்லிம்களின் மனம் புண்பட்டுள்ளது

பாராளுமன்றத்தில் நேற்று (22) சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை சமர்ப்பித்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தத் தாக்குதல் தொடர்பில் ஜனாதிபதிக்கு தான் அறிவித்துள்ளதாகவும் தேரர் கூறியுள்ளார். இந்தத் தாக்குதல் தொடர்பில் நன்கு அவர் அறிந்துள்ளதாகவே தெரிகிறது. இதுபோன்ற கருத்துக்களால் நாட்டுக்கு சுற்றுலாத்துறையினர் வருவார்களா? முதலீட்டாளர்கள் வருவார்களா? எனவும் முஜிபுர் ரஹ்மான் எம்.பி கேள்வி எழுப்பினார்.

அக்கூற்று தொடர்பில், ஞானசார தேரர், சி.ஐ.டிக்கு அழைத்து விசாரிக்கப்பட்டுள்ளாரா? தேரர் குறிப்பிடும் குழுவினர் கைது செய்யப்பட்டுள்ளனரா? எனவும் அவர் வினவியுள்ளார்.

ஞானசாரரால் குரான் தொடர்பில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் அனைத்தும் திரிபுபடுத்தப்பட்ட பொய்யான குற்றச்சாட்டுக்கள் என தெரிவித்த முஜிபூர் ரஹ்மான் எம்.பி, தாக்குதலின் பிரதான சூத்திரதாரியாக அல்லாஹ்வை குறிப்பிட்டு கூறியதால், உலகில் உள்ள கோடிக்கணக்கான முஸ்லிம்களின் நம்பிக்கையில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளார்.

நான் வஹாப்வாதி அல்ல. இஸ்லாமில் வஹாப் வாதம் இல்லை. முஸ்லிம் மதத் தலைவர்களுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் ஞானசார தேரருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுமா எனவும் அவர் இதன்போது வினவினார்.

# காணாமல் போனவர்கள் பற்றி மறைப்பதற்கு ஒன்றும் இல்லை

சம்பவம் ஏற்படாத வகையில், அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவதே சிறந்த செயற்பாடு என்றார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (22) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில், ஊடகவியலாளர் ஒருவர், காணாமல் போனவர்களுக்கு உண்மையில் என்ன நடந்தது என எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

இதனை எந்த வகையிலும் மறைக்க முடியாது. மறைக்கும் விடயமும் அல்ல. எந்த சந்தர்ப்பத்திலாவது இது குறித்து சரியான தகவல்கள் வெளிப்படலாம். அப்போது அறிந்துகொள்ளலாம். காணாமல் போனதாக தெரிவிக்கப்படும் பலர் வெளிநாடுகளில் அரசியல் புகலிடம் பெற்று வாழ்கின்றனர்.

அதேபோல் தமது பிள்ளைகள் காணாமல் போயிருப்பதாக தெரிவிக்கும் பெற்றோர் ஒவ்வொரு வருடமும் கண்ணீர் விடும் காட்சிகளை காண்கின்றோம். எனவே இவர்கள் அனைவரும் இலங்கைப் பிரஜைகள். இவர்கள் தொடர்பில் பொறுப்புடன் செயற்பட வேண்டியுள்ளது. இவ்வாறான சம்பவங்கள் மீண்டும் ஏற்படாத வகையில் செயற்படுவதே சிறந்தது.

காணாமல் போனவர்களுக்கு என்ன நடந்தது என்பது குறித்து என்னால் திட்டவட்டமாக எதனையும் கூறமுடியாது. இதனைக் கண்டறியவே இலங்கையில் காணாமல் போனோர் அலுவலகம் தாபிக்கப்பட்டுள்ளது. அத்துடன், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, வெளிநாட்டு புலம்பெயர் இலங்கையர்களுக்கு பகிரங்கமாக அழைப்பு விடுத்துள்ளதாகவும், எனவே அனைவரும் ஒன்றிணைந்து, இது குறித்து பேச்சுவார்த்தை நடத்த, அழைப்பு விடுத்துள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

# அவமான செயல்

மேலும் இச்சம்பவம் தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவும் தாமாக முன்வந்த விசாரணைகளை மேற்கொள்வதாகவும் தெரிவித்த அவர், இச்சம்பவம் தொடர்பில் மேல்நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி மேற்கொள்வார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய (22) அமர்வில் கலந்துகொண்டு, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பியால் கேட்கப்பட்ட விசேட கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய நீதி அமைச்சர், அநுராதபுர சிறைச்சாலை இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்தவத்தவின் செயற்பாடு குறித்து நீதி அமைச்சர் என்றவகையில் நான் கண்டிக்கிறேன். இதுபோன்ற சம்பவங்கள் ஒருபோதும் நடக்கக்கூடாது. இதுவோர் அவமானமான செயற்பாடு. இச்சம்பவத்தால் பாதிக்கப்பட்டவர்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்காக அவர்களிடம் மன்னிப்புக்கோருகிறேன்.

இச்சம்பவம் தொடர்பில் சி.ஐ.டியினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். அதேபோல இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவும் சுயாதீனமாக முன்வந்து விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

சிறைச்சாலை கைதிகள் அரசாங்கத்தின் கீழேயே உள்ளனர். எனவே அவர்களைப் பாதுகாக்கும் பொறுப்பு அரசாங்கத்துக்கு உள்ளது. இதேவேளை எனது அமைச்சின் கீழ் உள்ள குற்றங்கள் மற்றும் சாட்சிகளில் பாதிக்கப்பட்டோர் பாதுகாப்பு தேசிய ஆணையமும், இச்சம்பவத்தால் பாதிக்கப்பட்ட சிறை கைதிகளை பாதுகாப்பு, கௌரவம் ஆகியவை உறுதி செய்யப்பட வேண்டுமென கடிதமொன்றை அனுப்பியுள்ளது. இதுபோன்ற சம்பவம் ஒருபோதும் நடந்திருக்கக்கூடாது. எனினும், இச்சம்பம் இனவாதத்தால் தூண்டப்பட்ட ஒன்றல்ல.

இதேவேளை, அநுராபுர சிறைச்சாலையில் உள்ள தமிழ் கைதிகளை அங்கேயே வைத்திருக்க வேண்டுமென அரசாங்கம் அடம்பிடிக்காது. தேவைப்படும் பட்சத்தில் பாதுகாப்பான சிறைச்சாலைகளுக்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும். அதற்காக அவர்கள் யாழ்ப்பாண சிறைச்சாலைக்கு மாற்றப்படுவார்கள் என்றும் கூற முடியாது.

அநுராதபுரத்தில் உள்ள தமிழ் கைதிகளின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. அவர்களின் பாதுகாப்பு கண்காணிக்கப்பட்டும் வருகிறது எனவும் தெரிவித்தார்.

# ஆட்சியை இழந்தது கூட்டமைப்பு

நேற்றைய அமர்வு கடுமையான சுகாதார நடைமுறைகளுக்கு உட்பட்டு நடத்தப்பட்டது.

இதன்போது, தவிசாளர் தெரிவுக்குப் போட்டியிட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பு சார்பில் போட்டியிட்ட டெலோ உறுப்பினர் சதீஸ் 8 வாக்குகளையும் சுயேட்சைக் குழுவின் சார்பில் போட்டியிட்ட செல்வேந்திரா 9 வாக்குகளையும் பெற்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பான உப தவிசாளர், சுயேட்சைக் குழுவுக்கு சார்பாக வாக்களித்தார்.

வல்வெட்டித்துறை நகர சபை தவிசாளர் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் கோணலிங்கம் கருணானந்தராசா, அண்மையில் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தார். அதனால் ஏற்பட்ட வெற்றிடத்துக்கே, புதிய தவிசாளர் தெரிவு இடம்பெற்றது.

வல்வெட்டித்துறை நகர சபையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 7 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. சுயேட்சைக் குழு 4 உறுப்பினர்களையும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் ஈபிடிபி என்பன தலா 2 உறுப்பினர்களையும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி என்பன தலா ஓர் உறுப்பினர்களையும் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 40 தொழிற்சங்கங்கள் 1 மணிநேரம் எதிர்ப்பு

தங்களுடைய கோரிக்கை தொடர்பில், சுகாதார அமைச்சரின் கவனத்துக்கு கொண்டுச் செல்லப்பட்டுள்ளது என அகில இலங்கை சுகாதார சேவை சங்கத்தின் செயலாளர் மஹிந்த குருகே தெரிவித்தார்.

# சஹ்ரான் மனைவியின் விளக்கமறியல் நீடிப்பு

அவரை, ஒக்டோபர் 6ஆம் திகதி வரையிலும் விளக்கமறியல் வைக்குமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் நேற்று (22) உத்தரவிட்டுள்ளது.

சஹ்ரானின் மனைவி அப்துல் காதர் பாத்திமா ஹதியாவின் விளக்கமறியவே நீடிக்கப்பட்டுள்ளது. அவருடன் மேலும் அறுவரின் விளக்கமறியலும் நீடிக்கப்பட்டுள்ளது.

# கடன்பெறும் எல்லை 3,937 பில்லியனாக அதிகரிப்பு

கொரோனா வைரஸ் பெருந்தொற்று அதிகரித்துள்ள நிலைமையில், அரச வருமானம் இழக்கப்பட்டமையினால் சம்பளம் மற்றும் ஏனைய செலவுகளுக்கான மேலதிக நிதியினை ஒதுக்கீடு செய்ய வேண்டி ஏற்பட்டதாலும் இதர துறைகளில் செலவுகள் அதிகரித்தமையினாலும் 2021 ஆம் ஆண்டிற்கான அங்கீகரிக்கப்பட்ட கடன் எல்லையை அதிகரிக்க நேரிட்டுள்ளது.

இதனிடையே, கொரோனா அவசர சிகிச்சைகள் மற்றும் சுகாதார கட்டமைப்பை தயார்படுத்தும் திட்டத்திற்காக 100 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியை பெற்றுக்கொள்ளவும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (22) நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# ஞானசாரரின் கூற்றை கண்டித்தார் சாணக்கியன்

பாராளுமன்றத்தில் நேற்று (22) நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர், ஜனாதிபதியின் உத்தியோகபூர்வமற்ற பேச்சாளராகவே ஞானசார தேரர் செயற்படுகின்றார் என்றார்.

தனியார் தொலைக்காட்சி ஒன்றில் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே ஞானசாரதேரர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார் என்றார்.

இந்த நாட்டில் 500 அடிப்படைவாத கிறிஸ்தவ தேவாலயங்கள் இருப்பதாக தெரிவித்திருந்த ஞானசார தேரர், இஸ்லாமிய தலைவர்களை கைது செய்யுமாறும் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களின் பிரதான சூத்திரதாரி அல்லாஹ்தான் என்றும் தெரிவித்துள்ளார். அதனை நான் கண்டிக்கின்றேன். எனினும், ஆளும் தரப்பிலிருக்கும் முஸ்லிம்கள் மௌனமாகவே இருக்கின்றனர்.

எந்தநேரத்திலும் இலங்கையில் தாக்குதல்கள் நடத்தலாம் எனத் தெரிவித்துள்ளார். அப்படியாயின், சுற்றுலாத்துறையை எவ்வாறு மேம்படுத்த முடியும். வெளிநாடுகளிலிருந்து முதலீட்டாளர்கள் எப்படி நாட்டுக்கு வருவார்கள் என்றும் கேட்டார்.

# வீடுகளில் சிகிச்சை பெறும் எவரும் மரணிக்கவில்லை

அதற்கமைய, நாட்டில் பதிவான கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 5,07,330 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, 1,047 பேர் நேற்று முன்தினம் (21) குணமடைந்துள்ளனர். அதனடிப்படையில், தொற்றிலிருந்து குணமடைந்தோரின் எணணிக்கையும் 4,34,140 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, நாட்டில் நாளாந்தம் உற்பத்தி செய்யப்படும் ஒக்சிசன் அளவு வைத்தியசாலைகளில் தற்போது சிகிச்சை பெற்றுவரும் கொரோனா நோயாளர்களுக்கு போதுமானதாக உள்ளது எனத் தெரிவித்துள்ள சுகாதார மேம்பாட்டு அலுவலக பணிப்பாளர், விசேட வைத்திய நிபுணர் ரஞ்சித் பட்டுவண்துடாவ, வீடுகளில் சிகிச்சை பெறும் முறைமையின் கீழ் எந்தவொரு நோயாளரும் உயிரிழக்கவில்லை என்றார்.

# லொஹான் விவகாரத்தை விசாரிக்க நீதிபதி

பதிலளித்த போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், சிறைச்சாலை சம்பவம் தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருகிறது. சம்பவம் தொடர்பில் சிறைக்குள் சென்றவர்கள் உள்ளிட்ட 23 பேரிடம் வாக்குமூலங்கள் பெறப்பட்டுள்ளதாக பொலிஸ்மா அதிபரின் அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இச்சம்பவம் தொடர்பில் அமைச்சரவை கூட்டத்திலும் கலந்துரையாடப்பட்டதுடன், இது தொடர்பில் விசாரிக்க ஓய்வு பெற்ற நீதிபதி ஒருவரை நியமிக்குமாறு நீதி அமைச்சர் அலி சப்ரி, அமைச்சரவையில் கோரிக்கை விடுத்ததாகவும் தெரிவித்தார்.

எனவே, அரசாங்கம் இது தொடர்பில் சரியான தீர்மானம் எடுக்கும். ஸ்ரீ லங்கா பொதுஜன கட்சி சார்பிலும் சில ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படும். இந்த விடயம் தொடர்பில் அவசரப்பட்டு எதையும் கூறமாட்டேன் என்றார்.

# கொன்றவர்களுக்கு என்ன தண்டனை

தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் சபையில் கேள்வி எழுப்பினார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், சரணடைந்தவர்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்கப்படவேண்டுமென ஐ.நா. சாசனத்தில் கூறப்பட்டுள்ளது. ஐ.நா.வுக்கு சென்றுள்ள கோட்டாபய ராஜபக்ஷ, இலங்கையில் காணாமல் போனவர்களுக்கு மரண சான்றிதழ் கொடுக்கப் போவதாக கூறுகின்றார்.

அப்படி என்றால் கண் கண்ட சாட்சிகளுடன் இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டவர்கள் எல்லாம் கொல்லப்பட்டார்கள் என்றே ஜனாதிபதி கூறுகிறார் எனவும் அவர் தெரிவித்தார்.

# புத்தகசாலைகளை திறக்க அனுமதிக்கவும்

சீ.டி விக்ரமரத்னவினால், சுகாதார பணிப்பாளரிடம் கோரிக்கைவி டுக்கப்பட்டுள்ளது என அரசாங்கத் தகவல் திணைக்களத்தினால் விடுக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை புத்தக வெளியீட்டாளர்கள் சங்கத்தின் செயலாளர் சமந்த இந்தீவர சமரசிங்கவினால், பொலிஸ் மா அதிபருக்கு எழுதியுள்ள கடிதம் தொடர்பில், பொலிஸ் மா அதிபரினால் மேற்கண்டவாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஒன்றரை வருடங்களுக்கு மேல் நாட்டை அவ்வப்போது மூடியமையால், புத்தக வெளியீட்டு கைத்தொழில் பெரும் அனர்த்தத்துக்கு முகங்கொடுத்துள்ளது எனத் தெரிவித்த அச்சங்கம், புத்தகசாலைகளை மூடியே வைத்திருப்பதனால், அங்கு கடமையாற்றிவர்களுக்கு சம்பளம் கொடுக்கமுடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. கட்டடத்துக்கும் வாடகை செலுத்தவேண்டியுள்ளது. மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளிலும் பாதிப்புகள் ஏற்பட்டுள்ள என்றும் அச்சங்கம் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளது என்றும் அரசாங்கத் தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# காரில் தொற்றிய பொலிஸ் அதிகாரியை காருடன் இழுத்துச் சென்ற இருவர் கைது

தலங்கம பகுதியில் பொலிஸார் நடத்திய சுற்றி வளைப்பின் போது, குறித்த காருடன் இருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான நபர் அடையாளம் காணப்பட்டுள்ளார் என்றும் தெரிவித்த பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதான சந்தேகநபர், பல்வேறான குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர் என்பது ஆரம்பகட்ட விசாரணைகளின் இருந்து கண்டறியப்பட்டுள்ளார்.

அத்துடன், இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸ் குழுக்கள் நான்கும், புலனாய்வு குழுக்கள் இரண்டும் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றன எனத் தெரிவித்த அவர், ஹெரோய்ன் போதைப்பொருளை கொடுத்துவிட்டு தப்பிச்சென்றிருக்கும் ஓட்டோ சாரதியை கைது செய்யும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றார்.

# ரஞ்சன் எம்.பிக்கு கிடைத்த தண்டனைகள் அதிகம்

■ மகேஸ்வரி விஜயனந்தன்

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு வழங்கப்பட்ட தண்டனைகள் அதிகம் என்பது, எனது தனிப்பட்ட கருத்து என வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (22) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில், ஊடகவியலார் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

அதாவது, ரஞ்சன் ராமநாயக்க செய்த குற்றத்துக்காக அவருக்கு, சிறைத்தண்டனை வழங்கப்பட்டது. அத்துடன், 1,50,000 மக்கள் அவருக்கு வாக்களித்து, மக்கள் பிரதிநிதியாக செய்த பாராளுமன்ற உறுப்பினர் பதவியும் இரத்து செய்யப்பட்டுள்ளது.

இது நபர் ஒருவருக்கு கிடைக்க கூடிய மிகப்பெரிய தண்டனையாகும். எனவே அவருக்கு இத்தண்டனைகள் இரண்டும் அதிகம் என நான் உணர்கிறேன் எனவும் தெரிவித்தார். எனவே, இந்த விடயம் தொடர்பில் சாதகமாக சிந்திப்போம் என்றார்.

அமெரிக்க வாழ் இலங்கையரின் உதவியுடன்;

# ஒட்சிசன் வழங்கும் சிகிச்சை கருவிகள்



கொரோனா தொற்றாளர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக ஒட்சிசன் வழங்கும் சிகிச்சை கருவிகள் தயாரிப்பதற்கான உபகரணங்களை அமெரிக்க வாழ் இலங்கையர்கள் வழங்கியுள்ளனர்.

கொரோனா தொற்றாளர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக இலங்கை விமானப்படையால் தயாரிக்கப்பட்ட,'வெப்ப ஈரப்பததன்மை' மூலம் ஒட்சிசன் வழங்கும் சிகிச்சை கருவிகள் தயாரிப்பதற்கான உபகரணங்களை அமெரிக்காவில் வசிக்கும் இலங்கையர்களின் நிதி உதவியுடன் இலங்கை விமானப்படைக்கு கையளிக்கும் வைபவம் திங்கட்கிழமை (20) கொழும்பு விமானப்படை தலைமையகத்தில் நடைபெற்றது.

இதன்போது, இந்த உபகாரணங்களை விமானப்படை சுகாதாரப் பணிப்பாளர் எயார் வைஸ் மார்ஷல் லலித் ஜயவீர பொறுப்பேற்றார்.

கட்டுநாயக்க விமானப்படைத்தளத்தில் அமைந்துள்ள விமானப்படை பொது பொறியியல் பிரிவு, இரத்மலான விமானப்படைத் தளத்தில் அமைந்துள்ள மின் மற்றும் தொலைத் தொடர்பு பொறியியல் பிரிவு ஆகிய பிரிவுகள் இணைந்து இந்தக் கருவியை நிர்மாணிக்கின்றனர்.

இந்தக் கருவியானது, கொரோனா தொற்றுக்குள்ளான நோயாளிகளின் சுவாசக் கோளாறு தொடர்பான சிசிக்கைகளுக்குப் பெரிதும் உதவுகின்றது. மேலும் இந்தச் சிகிச்சை கருவிகளின் உற்பத்திகளை அதிகரிக்கவே அமெரிக்காவில் வசிக்கும் இலங்கையர்களால் இந்த நன்கொடை வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் விமானப்படை மின்னணு மற்றும் தொலைத்தொடர்பு பணிப்பாளர், விமானப்படை பொதுப்பொறியியல் பிரிவு பிரதிப்பணிப்பாளர் ஆகியோர் உட்பட அதிகாரிகள், படைவீரர்கள் ஆகியோர் பங்குபற்றினர்.





# நீர்கொழும்பில் கைக்குண்டுகள் மீட்பு



நீர்கொழும்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குப்பைத் தொட்டியில் இருந்து இரண்டு கைக்குண்டுகள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நீர்கொழும்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குப்பைத் தொட்டியிலிருந்து கழிவுகளை அகற்றும் சந்தர்ப்பத்தில் நகர சபை பணியாளர் ஒருவரால், இந்தக் கைக்குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

இந்தக் கைக்குண்டுகள் இரண்டும் குறித்த குப்பைத் தொட்டியில் எவ்வாறு வந்தன என்பது தொடர்பாக இன்னும் உரிய தகவல்கள் கிடைக்கப்பெறாத நிலையில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ மேலும் தெரிவித்துள்ளார்

> **“ குப்பைத் தொட்டியிலிருந்து கழிவுகளை அகற்றும் போது, நகரசபை பணியாளரால், இந்தக் கைக்குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை, குப்பைத் தொட்டியில் எவ்வாறு வந்தன என்பது தொடர்பான தகவல்கள் கிடைக்கப்பெறவில்லை**

14 வயது சிறுவன் படுகொலை;

# சந்தேகநபர் கைது




ஹம்பாந்தோட்டை வீரகெட்டிய, கஜநாயக்கம பிரதேசத்தில் துப்பாக்கியால் சுட்டதில் 14 வயது சிறுவன் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் தேடப்பட்டு வந்த முக்கிய சந்தேக நபர் மற்றொரு சந்தேக நபருடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

வீரகெட்டிய வனப்பகுதியில் பதுங்கியிருந்த இரு சந்தேக நபர்களும் நேற்றிரவு கைது செய்யப்பட்டதாக ஹம்பாந்தோட்டை பொலிஸார் தெரிவித்தனர். விசாரணைக்குப் பிறகு, வாலிபரைக் கொன்ற துப்பாக்கிச் சூட்டில் பயன்படுத்தப்பட்ட துப்பாக்கியை மீட்க பொலிஸார் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளனர். பிரதான சந்தேக நபருடன் கைது செய்யப்பட்ட இரண்டாவது சந்தேக நபரின் வசம் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். இரண்டு சந்தேகநபர்களும் வலஸ்முல்ல நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர். மேலும் வீரகெட்டிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். ஞாயிற்றுக்கிழமை குறித்த பிரதேசத்தில் வசிக்கும் உறவினர்கள் இரு குழுக்களுக்கிடையே ஏற்பட்ட தகராறின் போது, பிரதான சந்தேகநபர் துப்பாக்கியால் சுட்டதில் 14 வயது சிறுவன் கொல்லப்பட்டார்.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து, முக்கிய சந்தேக நபர் அந்த பகுதியை விட்டு தப்பி ஓடிவிட்டார். அதே நேரத்தில் துப்பாக்கிச் சூடு நடந்த மற்ற மூன்று சந்தேக நபர்களை பொலிஸார் கைது செய்தனர்.

> **“ வாலிபரைக் கொன்ற துப்பாக்கிச் சூட்டில் பயன்படுத்தப்பட்ட துப்பாக்கியை மீட்க பொலிஸார் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளனர். பிரதான சந்தேக நபருடன் கைது செய்யப்பட்ட இரண்டாவது சந்தேக நபரின் வசமிருந்த உள்ளூர் துப்பாக்கியையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்**

# தடுப்பூசி திட்டத்தை விரிவுபடுத்த திட்டம்




இலங்கையின் சனத்தொகையில் 60 சதவீதமானவர்களுக்கு தடுப்பூசி ஏற்றும் திட்டத்தை விரிவாக்குவதற்கு கொரோனா முகாமைத்துவத்துக்கான தேசிய செயலணி தீர்மானித்துள்ளது.

இதன் அடிப்படையில், அதற்காக கொரோனா மூலோபாய தயார்படுத்தல்கள் மற்றும் வேலைத்திட்டத்தின் கீழ் இலங்கையில் சுகாதாரத்துறையை தயார்படுத்தல் கருத்திட்டத்துக்காக 100 மில்லியன் அமெரிக்க டொலர் மேலதிக கடனை வழங்குவதற்கு உலக வங்கி உடன்பாடு தெரிவித்துள்ளது.

இதேவேளை, மேலதிக தொகை, 14 மில்லியன் பைஸர் தடுப்பூசிகளை கொள்வனவு செய்வதற்கும், தடுப்பூசி வழங்கும் பணிக்கு ஏற்புடைய ஏனைய செலவுகளுக்குமான நிதியிடலுக்காகவும் இது திட்டமிடப்பட்டுள்ளது.

# வீடொன்றில் தீ; ஒருவர் மரணம்



வனாதவில்லு, சேரக்குளிய பகுதியில் உள்ள வீடொன்றினுள் ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக வனாதவில்லு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த வீட்டில் வசித்து வந்த 97 வயதுடைய வயோதிபர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இவருடன் யார் இருந்தார்கள் அல்லது இவர் தனிமையில் வாழ்ந்தவரா என்ற விசாரணையை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும், சம்பவம் தொடர்பில் வனாதவில்லு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.




## செவ்வாய்க்கிழமை (21) இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எட்டப்பட்ட தீர்மானங்களில் சில:

### 01. கொழும்பு பறவைகள் பூங்கா

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர, மாதிவெலயில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான காணித்துண்டில் திட்டமிடல், நிதியிடல், நிர்மாணித்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல் போன்றவற்றின் அடிப்படையில் பறவைகள் பூங்கா கருத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

குறித்த காணித்துண்டை கொழும்பு பேர்ட் பார்க் (தனியார்) கம்பனிக்கு 30 வருடகால குத்தகை அடிப்படையில் வழங்குவதற்காக அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

### 02. அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை நிலைப்படுத்தல்

நிச்சயிக்கப்பட்ட எதிர்கால செலாவணி ஒப்பந்தத்தின் அடிப்படையில் நிலையான விலையின் கீழ் லங்கா சதொச நிறுவனத்திற்கு அத்தியாவசிய நுகர்வுப்பொருட்கள் கொள்வனவு செய்யும் வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்த அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது. மூன்று மாத காலத்திற்கு நிச்சயிக்கப்பட்ட எதிர்கால செலாவணி ஒப்பந்தத்தின் மூலம் தெரிவு செய்யப்பட்ட விநியோகத்தர்களுடன் உடன்பாடு எட்டப்பட்டுள்ளது..

### 03. மேலதிகக் கடன் பெறல்

கொவிட் - 19 இற்கான தேசிய பிரயோகங்கள் மற்றும் தடுப்பூசி திட்டமிடல் போன்றவற்றை இயன்றளவு இலங்கையின் சனத்தொகையில் 60 சதவீதமானவர்களுக்கு தடுப்பூசி ஏற்றும் அடிப்படை இலக்கை விரிவாக்குவதற்கு கொவிட் முகாமைத்துவத்திற்கான தேசிய செயலணி தீர்மானித்துள்ளது.

அதற்காக கொவிட் - 19 மூலோபாய தயார்படுத்தல்கள் மற்றும் பதிலளிப்புகள் வேலைத்திட்டத்தின் கீழ் இலங்கையில் கொவிட்- 19 அவசர பதிலளிப்புகள் மற்றும் சுகாதாரத்துறையை தயார்படுத்தல் கருத்திட்டத்திற்காக 100 மில்லியன் அமெரிக்க டொலர் மேலதிகக் கடனை வழங்குவதற்கு உலக வங்கி உடன்பாடு தெரிவித்துள்ளது.

குறித்த மேலதிக தொகை, 14 மில்லியன் ஃபைசர் தடுப்பூசிகளை கொள்வனவு செய்வதற்கும், தடுப்பூசி வழங்கும் பணிக்கு ஏற்புடைய ஏனைய செலவுகளுக்குமான நிதியிடலுக்காகத் திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

### 04. நான்கு கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தல்

பாசல் (BASEL) சமவாயத்தின் மூலம் உள்ளடக்கப்பட்டுள்ள ப்ளாஸ்ரிக் திண்மக்கழிவு முகாமைத்துவத்திற்கான இரண்டு கருத்திட்ட யோசனைகளும் மனிமாட்டா (MANIMATA) சமவாயத்தின் மூலம் உள்ளடக்கப்பட்டுள்ள பாதரசம் (Mercury) முகாமைத்துவத்திற்கான வழிகாட்டல்களை வகுத்தல் மற்றும் விழிப்புணர்வூட்டல்களுக்கான இரண்டு கருத்திட்ட யோசனைகளுக்கு அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

சுற்றாடல் மாசுறல் மற்றும் இரசாயன திரவ உலோக முகாமைத்துவத் துறையில் 04 கருத்திட்டங்களை 2021 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்துவதற்கான நிதியனுசரணையை வழங்குவதற்கு அபிவிருத்தி ஒத்துழைப்புக்களுக்கான நோர்வே ஏஜன்சி, மினமாடா (MINAMATA) சமவாயத்திற்குரிய விசேட சர்வதேச வேலைத்திட்டம், ஐக்கிய நாடுகள் சபையின் சுற்றாடல் வேலைத்திட்டம், சுவிட்சர்லாந்து அரசாங்கம், ஐக்கிய நாடுகள் சபையின் கைத்தொழில் அபிவிருத்தி அமைப்பு போன்ற நிறுவனங்கள் உடன்பாடு தெரிவித்துள்ளன. அதற்கும் அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

### 05. கழிவுகளை முகாமைத்துவப்படுத்தல்

விவசாயப் பயன்பாடுகளுக்கான பொதிகள் அதிகமாக பொலிஎதலீன் ரெறப்தலேட், கண்ணாடி, அதிக அடர்த்தி கொண்ட பொலித்தீன்கள், பொலிபுரோப்பலீன் போன்ற பதார்த்தங்களால் தயாரிக்கப்படுகின்றன.

இப்பொருட்கள் முறையற்ற விதத்தில் சுற்றாடலுக்கு அகற்றப்படுவதாலும், பயிர் நிலங்கள், வீடுகளை அண்டி எரியூட்டல்களால், சுற்றாடல் மாசுபடுகின்றமையால், அவற்றைச் சரியான வகையில் மீள்சுழற்சி செய்வதற்காக சுற்றாடல் அமைச்சு நிகழ்ச்சித்திட்டமொன்றை ஒழுங்குபடுத்தியுள்ளது.

குறித்த வேலைத்திட்டத்தின் கீழ் 2022 ஆம் ஆண்டு தொடக்கம் ஒவ்வொரு சிறுபோகத்திலும் மார்ச் மாதம் இரண்டாம் வாரமும், ஒவ்வொரு பெரும்போகத்திலும் செப்டெம்பர் மாதம் மூன்றாம் வாரத்திலும் வெற்றுப் ப்ளாஸ்ரிக், கண்ணாடி உறைகளைத் திரட்டும் வாரமாக பிரகடனப்படுத்தி விவசாய துறைசார் உத்தியோகத்தர்கள், கமக்கார அமைப்புகளின் ஒத்துழைப்புகளுடன் முன்மொழியப்பட்டுள்ள வேலைத்திட்டத்துக்கு அங்கிகாரம்.

### 06. செயற்பாட்டுத் திட்டம்

விவசாய ஒத்துழைப்புகளை நோக்கமாகக் கொண்டு இலங்கை, வியட்நாம் 2006 ஆம் ஆண்டு புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றை மேற்கொண்டுள்ளன. குறித்த ஒப்பந்தத்தின் ஏற்பாடுகளுக்கமைய வியட்நாமின் விவசாய மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சின் சர்வதேச ஒத்துழைப்புகள் திணைக்களம் மற்றும் இலங்கை விவசாய ஆராய்ச்சி கொள்கைகள் சபையின் இருதரப்பு உடன்பாடுகளுக்கமைய செயற்பாட்டுத் திட்டத்தை தயாரித்து நடைமுறைப்படுத்த வேண்டும்.

அதற்கமைய, இருதரப்பினரின் உடன்பாடுகளுக்கமைய 2022-2024 ஆம் ஆண்டுக்கான புதிய செயற்பாட்டுத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, குறித்த செயற்பாட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கும், அதற்கான உடன்பாட்டில் கையொப்பமிடுவதற்கும் அங்கிகாரம் வழக்கப்பட்டுள்ளது.

### 07. காலி துறைமுக அபிவிருத்திக் கருத்திட்டம்

பிராந்திய வர்த்தகத் துறைமுகமாக நடத்திச் செல்வதற்கு இயலுமான வகையில் 'சுற்றுலா ஈர்ப்பு மற்றும் பாதுகாப்பான இறங்குதுறை' எனும் தொனிப்பொருளின் கீழ் காலி துறைமுகத்தை அபிவிருத்தி செய்ய வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது.

அதற்கமைய, அரச தனியார் பங்குடமையின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் கருத்திட்டமாக சம்பிரதாய வரையறைகளுக்கு மட்டுப்பாடுகள் விதிக்காமல், தனியார் துறையின் முதலீடுகளைக் கவர்ந்திழுக்கும் வகையில் காலி துறைமுக அபிவிருத்திக் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

### 08. காணித்துண்டொன்றை ஒப்படைத்தல்

கொழும்பு- 15, அளுத்மாவத்தையில் துறைமுக அதிகார சபைக்குச் சொந்தமான காணித்துண்டொன்றை பெற்றுக்கொண்டுள்ளது. வரையறுக்கப்பட்ட கப்பல் கூட்டுத்தாபனத்தால் குறித்த காணித்துண்டுக்கு அரச மதிப்பீட்டுத் தொகையை செலுத்தினாலும், அதன் உரிமை இதுவரை சட்டரீதியாக வழங்கப்படவில்லை. அதற்கமைய, 29.53 பேர்ச்சர்ஸ் கொண்ட குறித்த காணித்துண்டை வரையறுக்கப்பட்ட கப்பல் கூட்டுத்தாபனத்திற்கு வழங்குவதற்கான அமைச்சரவைப் பத்திரத்துக்கு அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

### 09. 'Hope for Youth' வேலைத்திட்டம்

'இளைஞர்களின் எதிர்பார்ப்புக்கள் - Hope for Youth ' எனும் தேசிய இளைஞர் அபிவிருத்தி வேலைத்திட்டத்தை விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சால் மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. தற்போது இளைஞர் சமூகத்தில் நிலவும் 28 சதவீதமான தொழிலின்மையை 12 சதவீதமாகக் குறைப்பதும் இவ்வேலைத்திட்டத்தின் நோக்கமாகும்.

'யொவுன்புர' நிகழ்ச்சித்திட்டத்திற்குப் பதிலாக 2021 ஆம் ஆண்டு தொடக்கம் 'இளைஞர்களின் எதிர்பார்ப்புகள் - Hope for Youth ' நிகழ்ச்சித்திட்டத்தை அனைத்து பிரதேச செயலகப் பிரிவுகளையும் இலக்கு வைத்து தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மூலம் நடைமுறைப்படுத்துவதற்கு அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

ஐ.நாவில் கொண்டுவரப்படும் தீர்மானம்

# நல்ல தீர்வாக அமையவில்லை

■ சண்முகம் தவசீலன், செ.கீதாஞ்சன்



தொடர்ச்சியாக ஐ.நாவில் கொண்டுவரப்படும் தீர்மானம் என்பது, இலங்கையை அடிபணியவைப்பதும் அச்சுறுத்துவதுமாக இருந்ததே அன்றி, தமிழ் மக்களுக்கு நல்ல தீர்வாக அமைந்திருக்கவில்லை என்று, ஜனநாயக போராளிகள் கட்சியின் பொதுச் செயலாளர் இ.கதிர் தெரிவித்தார்.

முல்லைத்தீவில், நேற்று முன்தினம் (21) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு தொடர்ந்துரைத்த அவர் கூறியதாவது:

இம்முறையும் மக்கள் மிகுந்த ஏமாற்றத்தைச் சந்தித்துள்ளார்கள். இலங்கை தமிழர்கள் தனித்துவமான இனம். வரலாற்று ரீதியாக வடக்கு - கிழக்கு தாயகப் பகுதியில் வாழ்ந்து வந்தார்கள் என்ற அங்கிகாரம், இன்று வரைக்கும் உலக நாடுகளால் தமிழ் மக்களுக்கு வழங்கப்படவில்லை.

மாறாக, இலங்கையை சர்வதேசத்தின் நிகழ்ச்சி நிரலுக்குள் கொண்டு சென்று, அதன் ஊடாகத் தங்கள் பூகோள ரீதியான அரசியலை நகர்த்துவதற்காக, தமிழ் மக்களின் பிரச்சினையை சர்வதேசம் கையாண்டு வருகின்ற தோற்றப்பாட்டையே காணக்கூடியதாக இருக்கின்றது.

தொடர்ச்சியாக ஐ.நாவின் அமர்வு வரும் போது, தமிழ்த்தேசியம் சார்ந்த அரசியல்வாதிகள், தங்களின் கட்சி கொள்கைகளையும் அரசியலையும் அந்தக் காலங்களில் முன்னெடுத்துச் செல்கின்றார்களே தவிர, மக்கள் தொடர்பில் மக்களின் நிரந்தர தீர்வு, இழைக்கப்பட்ட அநீதிகள், நீதி விசாரணை, போரின் பின்னர் சரணடைந்த கைதிகள், காணாமல் ஆக்கப்பட்டோர், போராளிகளின் மறுவாழ்வு, நீதி விசாரணைகள் தொடர்பில் எந்த முன்னேற்றத்தையும் செய்யவில்லை. அதற்கு இந்த அரசாங்கத்துக்கு சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுக்க முன்வரவில்லை.

போரில் சம்பந்தப்படாதவர்களுடன், விடுதலைப் போராட்டத்துடன் தொடர்பு இல்லாதவர்களுடன், மனித உரிமைகள், மக்களின் உரிமைகள், போராளிகளின் நிலைப்பாடு ஆகியன தொடர்பாகப் பேசுவதில் எந்தப் பயனும் இல்லை.

எதிர்காலத்தில் இவ்வாறான செயற்பாடுகளை நிறுத்திவிட்டு, சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி, நீதிக்கான பொறிமுறையினை உருவாக்குவதுதான் பொருத்தமானதாக இருக்கும் என்றார்.

தடுப்பூசி பெறாத 20 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு

# விரைவில் சிக்கல்கள்

■ எம்.எஸ்.எம்.ஹனீபா



கொரோனா தடுப்பூசி பெறாத 20 வயதுக்கு மேற்பட்டவர்களை ஒன்றுகூடலில் இருந்தும் பொது இடங்களுக்குச் செல்வதிலிருந்தும் அரசாங்கத்தால் இடைநிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென, கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஜீ. சுகுணன், நேற்று (22) தெரிவித்தார்.

இதுவரை தடுப்பூசி பெற்றுக்கொள்ளாத 20 வயதுக்கு மேற்பட்டவர்கள், தத்தமது சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவில் அமைக்கப்பட்டுள்ள தடுப்பூசிகள் வழங்கும் மையங்களுக்குச் சென்று, தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்ளுமாறும் கேட்டுள்ளார்.

எதிர்வரும் காலங்களில் தடுப்பூசிகளைப் பெறலாமென எதிர்பார்த்து, இப்போது கிடைக்கின்ற தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளாது விட்டால் பலத்த பாதிப்பு ஏற்பட்டு, மரணம் ஏற்படக் கூடிய வாய்ப்புகள் காணப்படுமெனவும் எச்சரித்தார்.

20 தொடக்கம் 29 வயதுக்குட்பட்ட இளைஞர்கள், தடுப்பூசி பெற்றுக் கொள்வதில் ஆர்வம் குறைந்து காணப்படுகின்றனர். வதந்திகளை நம்பாமல் எம்மையும் சமூகத்தையும் நாட்டையும், கொவிட்-19 தாக்கத்திலிருந்து பாதுகாத்துக் கொள்ள உங்களுக்கான தடுப்பூசியை விரைவாகப் பெற்றுக் கொள்ளுமாறும் கேட்டுள்ளார்.

உலக சுகாதார ஸ்தாபனம் சினோபாஃர்ம் தடுப்பூசியை அங்கிகரித்துள்ளது. ஆகவே, இத்தடுப்பூசி மிகவும் சிறந்த பாதுகாப்பைக் கொடுக்கும்.

மேலும், கொரோனா வைரஸ் திரிவடைதல் பாரிய சவாலாக எதிர்காலத்தில் வருமாக இருந்தால், தடுப்பூசிகள் பெற்றுக் கொண்டவர்கள் இதிலிருந்து பாதுகாப்பு பெற்றுக் கொள்ள முடியுமெனவும் தெரிவித்தார்.

## 369 கிலோகிராம் மஞ்சள் பறிமுதல்

■ எஸ். தில்லைநாதன்



யாழ்ப்பாணம், குருநகர் கடற்பகுதி ஊடாக யாழ்ப்பாணத்துக்கு கடத்திவரப்பட்ட சுமார் 369 கிலோகிராம் மஞ்சள் கட்டிகள், கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

ஐந்து மாடி கடற்பரப்பில் சந்தேகத்துக்கிடமான படகு ஒன்றை அவதானித்த கடற்படையினர், அதனை பின்தொடர்ந்த போது, படகில் இருந்தவர்கள் தப்பிச் சென்றனர்.

இதனையடுத்து, கடற்படையினர் படகை சோதனையிட்டபோது, அதில் இருந்த மஞ்சள் கட்டி கூடைகளை கைப்பற்றினர்.

சம்பவம் தொடர்பில் எவரும் கைது செய்யப்படாத நிலையில் கடற்படையினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மூத்த ஊடகவியலாளர்

## அந்தோனி மார்க் காலமானார்

■ சண்முகம் தவசீலன், எஸ். றொசேரியன் லெம்பேட்



மன்னார் மாவட்டத்தின் மூத்த ஊடகவியலாளரும் தமிழ்த் தேசிய பற்றாளருமான பீ.ஏ.அந்தோனி மார்க், தனது 80ஆவது வயதில், நேற்று முன்தினம் (21) இரவு காலமானார்.

திடீர் சுகவீனம் காரணமாக, முல்லைத்தீவு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், நேற்று முன்தினம் (21) இரவு உயிரிழந்தார். இவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மூத்த ஊடகவியலாளர் பீ.ஏ.அந்தோனி மார்க், மன்னார் மாவட்டத்தில் பல்வேறு பணிகளை ஆற்றியுள்ளார்.

அத்துடன், இவர் குரலற்ற மக்களின் குரலாக இயங்கிவந்தார். குறிப்பாக, காணாமல் ஆக்கப்பட்டவர்களை கண்டுபிடிக்கவும் அரசியல் கைதிகளின் விடுதலைக்காகவும் தொடர்ந்தும் குரல் கொடுத்து வந்ததோடு, பல்வேறு போராட்டங்களையும் தலைமை தாங்கி முன்னெடுத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



## இரும்பு முட்டுகளை திருடியவர் சிக்கினார்

■ ஏ.எல்.எம்.ஷினாஸ்

கல்முனை, மருதமுனை, நற்பிட்டிமுனை போன்ற பிரதேசங்களில் கட்டட நிர்மாண பணிகள் இடம்பெறும் போது, கொங்கிரீட் வேலைகளுக்காகவும் ஏனைய பணிகளுக்காகவும் பயன்படுத்தப்படும் இரும்பு முட்டுகளை திருடி, அதற்கு பல வர்ணங்கள் பூசி விற்பனை செய்து வந்த நபரொருவர், கல்முனை பொலிஸாரால் நேற்று (22) கைது செய்யப்பட்டுள்ளார்.

நீண்ட காலமாக இப்பகுதிகளில் இவ்வாறு இரும்பு முட்டுக்கள் திருடப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

எதிர்காலத்தில் பொதுமக்கள் இவ்வாறான கட்டட அபிவிருத்திப் பணிகள் இடம்பெறும் போது, விழிப்புடன் செயல்படுவது கட்டாயமானதாகும்.

சாதாரணமாக இவ்வாறு திருடப்படும் இரும்பு முட்டுகள் 4,000 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டு வருவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன என கல்முனை பொலிஸார் தெரிவித்தனர்.

கல்விச் சேவையிலிருந்து

## இஸ்மாயில் ஓய்வு

■ வி.ரி.சகாதேவராஜா



சம்மாந்துறை வலயக் கல்விப் பணிமனையின் விவசாய பாட ஆசிரிய ஆலோசகரான பி. இஸ்மாயில், தனது 33 வருட கல்விச் சேவையிலிருந்து நாளை (24) ஓய்வுபெறுகிறார்.

சம்மாந்துறையைச் சேர்ந்த இஸ்மாயில், 17 வருடங்கள் ஆசிரிய சேவையிலும், 15 வருடங்கள் ஆசிரிய ஆலோசகராகவும் சேவையாற்றியுள்ளார்.

இவர், தனது ஆரம்ப, இடைநிலைக் கல்வியை சம்மாந்தறை அல்மர்ஜான் முஸ்லிம் மகளிர் கல்லூரியிலும் உயர்கல்வியை சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயத்திலும் பூர்த்தி செய்து, விவசாய டிப்ளோமா பயிற்சியை, அம்பாறை ஹார்டி உயர்தொழில்நுட்பக் கல்லூரியில் பூர்த்தி செய்தவராவார்.

சாளம்பைக்கேணி அஸ்ஸிராஜ் மகா வித்தியாலயம், அல்மர்ஜான் முஸ்லிம் மகளிர் கல்லூரி, தாருஸ்ஸலாம் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் கற்பித்தல் பணியில் ஈடுபட்டு வரவேற்பைப் பெற்றவராவார்.



மையவாடி பகுதியில் மைதானம்:

## ஆராயுமாறு பிரதேச செயலாளரிடம் கோரிக்கை

■ எஸ்.றொசேரியன் லெம்பேட்



முசலி பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட சிலாபத்துறை, புதுவெளி பகுதியில் உள்ள முஸ்லிம் மையவாடி பகுதியில், தற்போது கரப்பந்தாட்ட மைதானம் அமைப்பதற்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றமை தொடர்பில் ஆராய்ந்து, துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பிரதேச செயலாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக, மன்னார் மாவட்டச் செயலாளர் திருமதி ஏ.ஸ்ரான்லி டி மெல் தெரிவித்தார்.

முசலி மஸ்ஜிதுத் தக்வா ஜும் ஆப் பள்ளிவாசலுக்கு சொந்தமான சுமார் 2 ஏக்கர் காணியில் பாலர் பாடசாலை, பள்ளிவாசல், மையவாடி போன்றவை அமைந்துள்ளன.

எனினும், மையவாடிக்கென ஒதுக்கப்பட்ட காணிக்குள், கரப்பந்தாட்ட மைதானம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதோடு, ஆரம்ப கட்ட பணிகள் இடம்பெற்று வருகின்றன.

குறித்த விளையாட்டு மைதானம் அமைக்கும் நடவடிக்கைக்கு, கிராம மக்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ள போதும், அதிகாரிகள் குறித்த விளையாட்டு மைதானத்தை, குறித்த மையவாடிப் பகுதியில் அமைக்க நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.





## அறிமுக நிகழ்வு...

■ எஸ். நிதர்ஷன்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடத்தின், சட்டத்துறையில் பயில்வதற்காக 2019/2020 கல்வி ஆண்டுக்குத் தெரிவு செய்யப்பட்ட புதுமுக மாணவர்களுக்கான அறிமுக நிகழ்வு, நேற்று முன்தினம் (21) முற்பகல் 11 மணியளவில் நடைபெற்றது. சட்டத்துறை தலைவர் திருமதி துஷானி சயந்தன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா, பதிவாளர் வி. காண்டீபன், கலைப் பீடாதிபதி கலாநிதி கே. சுதாகர், மாணவர் நலச்சேவைகள் பணிப்பாளர் கலாநிதி சி. ராஜ்உமேஷ், பதில் நூலகர் திருமதி ச. கல்பனா ஆகியோர் கலந்துகொண்டு புதுமுக மாணவர்களுக்கான வழிகாட்டுதல்களை வழங்கினர்.



தாதியர் சங்கத்தினர் போராட்டத்துக்கு

## முல்லைத்தீவில் ஆதரவு

■ செ.கீதாஞ்சன்



நாடளாவிய ரீதியில், தாதியர் சங்கத்தினர், ஆறு அம்ச கோரிக்கைகளை முன்வைத்து, நேற்று (22) முன்னெடுத்த பணிப்பகிஷ்கரிப்புப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து, முல்லைத்தீவு மாவட்ட தாதியர் மருத்துவ சங்கத்தினரும், அரை மணிநேர பணிப்புறக்கணிப்பை மேற்கொண்டு, கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கொரோனா காலத்தில் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், இந்தக் காலத்தில் மேலதிக நேர விசேட தின கொடுப்பனவை கட்டுப்பாடு இன்றி வழங்குதல், சுகாதார ஊழியர்களின் வெற்றிடங்களை நிரப்புதல் உள்ளிட்ட ஆறு அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து, பணிபுறக்கணிப்பில் ஈடுபட்டு உள்ளார்கள். கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டாத பட்சத்தில், மீண்டும் 27ஆம் திகதி, 5 மணிநேர பணிப்பகிஷ்கரிப்பை மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

கணவன் இல்லாத போது

## இளம் பெண்ணிடம் அத்துமீறிய இளைஞனுக்கு விளக்கமறியல்

■ எப்.முபாரக்

திருகோணமலை, கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இளம் பெண்ணொருவரை துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய இளைஞனை, எதிர்வரும் ஒக்டோபர் 4ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, கந்தளாய் நீதிமன்ற நீதிவான் விசானி தேனவது, நேற்று (22) உத்தரவிட்டார்.

கந்தளாய் பகுதியைச் சேர்ந்த 23 வயது இளைஞனே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபர், கந்தளாய் பகுதியிலுள்ள திருமணமான இளம் பெண்ணொருவரை அவரது கணவன் இல்லாத சந்தர்ப்பத்தில் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியதாகத் தெரிவித்து, கந்தளாய் பொலிஸ் நிலையத்தில் கணவனால் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டது.

அதனையடுத்து, சந்தேக நபரைக் கைது செய்த பொலிஸார், கந்தளாய் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்திய போதே விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

பாதிக்கப்பட்ட இளம் பெண், வைத்திய பரிசோதனைக்காக கந்தளாய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

காத்தான்குடி ஆதார வைத்தியசாலை

## சிற்றூழியர்கள் கவனயீர்ப்பு

■ எம்.எஸ்.எம் நூர்தீன்

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து, காத்தான்குடி ஆதார வைத்தியசாலையின் சிற்றூழியர்கள், வைத்தியசாலைக்கு முன்பாக நேற்று (22) மதியம் ஒன்றுகூடி கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பொது நிர்வாக சுற்றறிக்கையின் படி, அனைத்து சுகாதார ஊழியர்களுக்கும் விசேட விடுமுறை வழங்க வேண்டும்; கடமைக்கு சமூகமளிக்காத இடையூறுகள் உள்ள சுகாதார ஊழியர்களுக்கு, அருகிலுள்ள வைத்தியசாலைகள் அல்லது வைத்திய நிலையங்களில் கடமையாற்றுவதற்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், சம்பள அதிகரிப்பு போன்ற பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இந்த ஆர்ப்பாட்டத்தை இவர்கள் முன்னெடுத்தனர்.

இதன்போது, தமது கோரிக்கைகள் எழுதப்பட்ட பதாகைகளை சிற்றூழியர்கள் தாங்கியிருந்தனர்.



மட்டு. வாவியில் மிதந்த

## ஆணின் சடலம் மீட்பு

■ வ.சக்தி, க.விஜயரெத்தினம்



மட்டக்களப்பு வாவியின் குருமண்வெளி ஓடத்துறைப் பக்கமிருந்து ஆண் ஒருவரின் சடலம், நேற்று (22) மீட்கப்பட்டுள்ளதாக களுவாஞ்சிகுடி பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர், குருமண்வெளி 12ஐ சேர்ந்த 68 வயதுடைய குமாரையா கோபாலசாமி என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவர், நேற்று முன்தினம் (21) இரவு 11 மணி வரைக்கும் தனது வீட்டில் இருந்துள்ளதுடன், அதன்பின்னர் காணாமல் போயுள்ளார்.

இந்நிலையிலேயே, நேற்றுக் காலை வாவியில் சடலம் ஒன்று கிடப்பதாக அறிந்த உறவினர்கள், அங்கு சென்று பார்வையிட்டு, பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர்.

ஸ்தலத்துக்கு விரைந்த களுவாஞ்சிகுடி பொலிஸாரும், மட்டக்களப்பு தடயவியல் பொலிஸாரும் சடலத்தைப் பார்வையிட்டதுடன், மரணித்த நபர் பாவித்ததாகக் கருதப்படும் ஊன்றுகோல், டோச் லைட் ஆகியவற்றறை ஆற்றங்கரை ஒரத்தில் இருந்து மீட்டுள்ளனர்.

சம்பவ இடத்துக்கு வந்த களுவாஞ்சிகுடி பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி சிதம்பரப்பிள்ளை ஜீவரெத்தினம், சடலத்தைப் பார்வையிட்டதுடன், பி.சி.ஆர் பரிசோதனைக்கு உட்படுத்தும்படி பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

பயிற்சி அளிக்கப்பட்ட மலையக இளைஞர், யுவதிகள்

# சுயதொழிலால் பலன்

**இராஜாங்க அமைச்சர் ஜீவன் பெருமிதம்**



ஆ.ரமேஸ்

முதன் முறையாக மலையக இளைஞர், யுவதிகளின் சுயதொழிலை ஊக்குவிக்கும் முகமாக, டயகம பிரஜாசக்தி நிலையத்தால் தெரிவு செய்யப்பட்டு, பயிற்சி அளிக்கப்பட்ட இளைஞர், யுவதிகள் விவசாயத்தின் ஊடாகத் தமது சுயதொழில் முயற்சியில் ஈடுபட்டு, பலன் பெற்று வருவதாக, இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

நாட்டில் சுமூகமான சூழ்நிலை தோன்றும்போது, அனைத்து விதமான கூட்டுப்பண்ணை செயற்பாடுகளும் முறையாகவும் தொடர்ச்சியாகவும் ஆரம்பிக்கப்பட்டு முன்னெடுக்கப்படும்.

மேலும், மலையகத்தின் ஏனைய பகுதிகளிலும் மலையக இளைஞர், யுவதிகளின் சுயதொழிலை ஊக்குவிக்க, பிரஜா சக்தியினூடான வேலைத்திட்டம் எதிர்வரும் காலத்தில் விரைவாக முன்னெடுக்கப்பட உள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷவின் 'சௌபாக்கியத்தின் நோக்கு' வேலைத்திட்டத்துக்கு அமைவாக, தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சின் கீழ் இயங்கும் சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்தின் 'பிரஜா சக்தி' நிலையம், இந்தச் சுயதொழில் ஊக்குவிப்புக்கு சக்தி வழங்கியுள்ளது.

இதற்கமைய, டயகம பிரதேசத்தில் 'பிரஜா சக்தி' ஊடாக, கூட்டு பண்ணையாளர்கள் உள்ளிட்ட விவசாய பயிற்சிக்கென தெரிவு செய்யப்பட்ட இளைஞர், யுவதிகளுக்கு கடந்த காலங்களில் பயிற்சிகள் அளிக்கப்பட்டன.

பட்டல்கல தோட்டத்தில் விவசாய காணிகளை

# கையளிக்குமாறு தோட்ட நிர்வாகம் பணிப்பு

துவாரகஷான்

டிக்கோயா, பட்டல்கல மேற்பிரிவு தோட்டத்தில் வீட்டுத் தோட்டப் பயிர்ச் செய்கைக்காக விவசாயம் செய்து வரும் 10 குடும்பங்களின் காணிகளை கையளிக்குமாறு, தோட்ட நிர்வாகம் 21 நாள்கள் அவகாசம் வழங்கி தொழிலாளர்களுக்கு நோட்டீஸ் அனுப்பி வைத்துள்ளதாக, நோர்வூட் பிரதேச சபைத் தலைவர் கே. குழந்தைவேல் ரவி தெரிவித்தார்.

குறித்த தொழிலாளர்கள், பல வருடங்களாக வீட்டுத் தோட்டப் பயிர்ச் செய்கை மேற்கொண்டு வருவதுடன், சில தொழிலாளர்கள் விவசாய திணைக்களத்தில் தம்மைப் பதிவு செய்து கொண்டு தேவையான உரம் போன்ற உதவிகளையும் பெற்று, மரக்கறி பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

எனினும், கொரோனா காரணமாக தோட்டங்களில் வேலை நாள்கள் குறைவடைந்துள்ளதால், தொழிலாளர்கள் முழுமூச்சாக விவசாயத்தில் ஈடுபட்டு வரும் நிலையில், திடீரென தோட்ட நிர்வாகம் தொழிலாளர்கள் விவசாயம் செய்து வரும் காணிகளை தோட்டத்துக்குத் திருப்பித் தருமாறு 21 நாள்கள் அவகாசம் கொடுத்து நோட்டீஸ் அனுப்பி வைத்துள்ளமை தொழிலாளர்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இது தொடர்பில், இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் ஊடாக விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளதாக ரவி குழந்தைவேல் தெரிவித்துள்ளார்.

இருவேறு இடங்களில் விபத்து;

# நால்வர் காயம்

எஸ்.கணேசன், எம். செல்வராஜ், தனராஜ்




கொட்டகலை, எல்ல ஆகிய இடங்களில் நேற்று முன்தினம் (21) இடம்பெற்ற விபத்தில் நால்வர் காயமடைந்து வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதற்கமைய, கொட்டகலை நகர உள்வீதியிலிருந்து, பிரதான வீதியை நோக்கிப் பயணித்த ஓட்டோவுடன் ஹட்டனிலிருந்து தலவாக்கலை நோக்கிச் சென்ற மோட்டர் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளாகியது.

இதில் மோட்டர் சைக்கிளில் சென்ற இருவரும், ஓட்டோ சாரதியும் காயமடைந்துள்ளனர்.

இவ்விபத்து குறித்து மேலதிக விசாரணைகளை திம்புள்ள பத்தனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்

இதேவேளை, மரக்கறி வகைகளை ஏற்றிச்சென்ற டிப்பர் லொறியொன்று, பாதையை விட்டு விலகி, பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளாகியதில், சாரதி படுகாயமுற்ற நிலையில், பதுளை வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பண்டாரவளை - வெள்ளவாய பிரதான வீதியின் எல்ல பகுதியில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

சுமார் 50 அடி பள்ளத்தில் பாய்ந்து லொறி விபத்துக்குள்ளான போது, லொறியின் உதவியாளர் பாய்ந்து தப்பியுள்ளார்.

எனினும், சுமார் இரண்டு மணித்தியாலயங்களாக மேற்கொள்ளப்பட்ட பாரிய பிரயத்தனங்களின் பின்னர், சாரதி படுகாயங்களுடன் மீட்கப்பட்டு, பதுளை அரசினர் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

எல்ல பொலிஸார், இவ் விபத்து குறித்து ஸ்தல விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

உரிய அறிவிப்பு இன்மையால்

# முதியவர்கள் ஏமாற்றத்துடன் திரும்பினர்

ரஞ்சித் ராஜபக்‌ஷ



ஹட்டன் தபாலகத்துக்கு முதியோர் கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ள வந்த முதியவர்கள் பலர் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.

சிரேஸ்ட பிரஜைகளுக்கான மாதாந்த கொடுப்பனவின் செப்டெம்பர் மாதத்துக்கான கொடுப்பனவு, நேற்றுமுன்தினம் (21) ஹட்டன் தபால் நிலையத்தில் வழங்கப்பட்ட நிலையில், நேற்று முன்தினம் வரமுடியாதவர்கள் நேற்று (22) தபாலகத்துக்கு சென்றனர்.

எனினும், நேற்றும் (22) இன்றும் (23) தபால் நிலையம் மூடப்பட்டிருக்கும் என்பதை அறியாத சிலர் முதியோர் கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ள சென்று, ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.

இவர்களுள் பலர் வாடகைக்கு ஓட்டோக்களை அமர்த்தி வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஹட்டன் தபால் நிலையம், 22, 23 ஆகிய திகதிகளில் மூடப்பட்டிருக்கும் என எவ்வித அறிவிப்புகளும் ஒட்டப்பட்டிருக்காமை காரணமாக, முதியவர்கள் அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்தனர்.

# "இனி யானைகளை துரத்தமாட்டோம்"

**மாத்தளை வனஜீவராசிகள் அதிகாரிகள் திட்டவட்டம்**

மஹேஸ் கீர்த்திரத்ன

நேற்று முன்தினத்திலிருந்து (21) கிராமங்கள், விளைநிலங்களுக்குள் நுழையும் யானைகளைத் துரத்தும் நடவடிக்கையிலிருந்து விலகுவதாக மாத்தளை ரஜ்ஜமன வனஜீவராசிகள் அலுவலக அதிகாரிகள் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாத்தளை, இம்புல்தெனிய பிரதேசத்தில் காட்டு யானைகளைத் துரத்தும் நடவடிக்கையில் அதிகாரிகள் ஈடுபட்ட போது, நபர் ஒருவரை யானை தாக்குவதாக போலித் தகவலைத் தெரிவித்து, அதிகாரிகளை சம்பவ இடத்துக்கு வரவழைத்து, தாக்குதலை முன்னெடுத்தமையால், இத்தீர்மானத்தை எடுத்ததாக மாத்தளை ரஜ்ஜமன வனஜீவராசிகள் அலுவலக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு அதிகாரிகள் மீது தாக்குதல் நடத்திய நபர்கள், தம்வசம் புலியின் பற்களை வைத்திருந்த குற்றச்சாட்டில், இதற்கு முன்னர் கைதுசெய்யப்பட்ட நபர்கள் என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எனவே, குறித்த தாக்குதல் சம்பவத்தை அனுமதிக்க முடியாதென்றும் கொரோனா தொற்றுக்கு மத்தியில் தமது கடமைகளை முன்னெடுக்கும் அதிகாரிகளுக்கு எதிராக முன்னெடுக்கும் இவ்வாறான செயற்பாடுகளை கண்டிப்பதாகவும் மாத்தளை ரஜ்ஜமன வனஜீவராசிகள் அலுவலக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மொனராகலை மாவட்டத்தில் காடுகள் தீப்பற்றுவதைக்

# கட்டுப்படுத்த புதிய யோசனைகள்

சுமணசிறி குணதிலக

மொனராகலை மாவட்டத்தில் காடுகள் தீப்பற்றுவதைத் தடுப்பதற்கு, புதிய யோசனைகளை உருவாக்குவதற்கான கலந்துரையாடல், மொனராகலை மாவட்ட செயலாளர் குணதாஸ சமரசிங்க தலைமையில், மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

இந்த மாதத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் மொனராகலை மாவட்டத்தில் 10 தீ விபத்து சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

குறிப்பாக, மொனராகலை நகருக்கு நீர் விநியோகிக்கப்படும் ஜுலோன் மலைப் பகுதியில் இரண்டு தீப்பரவல் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாகவும் எனவே இவ்வாறான தீப்பரவலுக்கு மனித செயற்பாடுகள் காரணமாக அமைவது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

எனவே, இவ்வாறான தீ பரவல் சம்பவங்களைக் கட்டுப்படுத்த விசேட திடீர் சுற்றிவளைப்பு, பாதுகாப்பு காவலரண்களை அமைத்தல் உள்ளிட்டவைகள் யோசனைகளாக முன்வைக்கப்பட்டுள்ளன.








# அன்பளிப்பு...

கட்டுகஸ்தோட்டை வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் கொரோனா தொற்றாளர்களின் நன்மை கருதி, இஸ்ரேலிலுள்ள இலங்கையர்களின் உதவியுடன், சுமார் 2,10,000 ரூபாய் பெறுமதியான 3 ஒக்சிசன் சிலிண்டர்கள் அன்பளிப்பு செய்யப்பட்டன. (மொஹமட் ஆஸிக்)

லிந்துலை பிரதேசத்தில் 20–29 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு

# தடுப்பூசி செலுத்தல் தொடர்பான அறிவிப்பு

பி.கேதீஸ்

லிந்துலை பொது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட 20-29 வயதுக்குட்பட்ட அனைவருக்குமான கொரோனா தடுப்பூசி செலுத்தல் நடவடிக்கை 23ஆம் திகதி வோல்ரீம், சமர்செட், ரட்ணகிரிய ஆகிய பகுதிகளில் முன்னெடுக்கப்படவுள்ளன.

அத்துடன், 24ஆம் திகதி நாகசேனை, இராணிவத்தை, பிரேமோர் ஆகிய பகுதிகளிலும் 25ஆம் திகதி டயகம கிழக்கு, டயகம மேற்கு, சந்திரிகாமம் ஆகிய பகுதிகளிலும் 26ஆம் திகதி பெல்மோரல், ஹோல்புறூக் ஆகிய பகுதிகளிலும் 27ஆம் திகதி பெயாவல், எல்பியன், கிளாஸ்கோ ஆகிய பகுதிகளிலும் 28 ஆம் திகதி ஹென்போல்ட், தங்ககலை, லிப்பகலை, எல்ஜின் ஆகிய பகுதிகளிலும் முன்னெடுக்கப்படவுள்ளன.

மேலும், 29ஆம் திகதி கர்ப்பிணி தாய்மார்களுக்கு அக்கரப்பத்தனை கிளப், டயகம மாவட்ட வைத்தியசாலையிலும் தடுப்பூசி செலுத்தப்படவுள்ளதாக லிந்துலை பொது சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் தெரிவித்துள்ளது.

விபத்தொன்றால் 15 கிராமங்கள்

# ஏழு மணிநேரம் இருளில் மூழ்கின

அஜித்லால் சாந்தஉதய



தேயிலைக் கொழுந்தை ஏற்றிச் சென்ற டிப்பர் வாகனமொன்று, குருவிட்ட-எரத்ன வீதியில் அதியுயர் மின்கம்பம் ஒன்றில் மோதி, விபத்துக்குள்ளானதில் குறித்த மின்கம்பம் இரண்டாக உடைந்துள்ளது.

இதனால் 15 கிராமங்களுக்கான மின்சாரம் ஏழு மணித்தியாலங்கள் துண்டிக்கப்பட்டிருந்தாக பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் (21) இரவு இந்த விபத்து இடம்பெற்றுள்ள நிலையில், குறித்த மின்கம்பத்தில் டிப்பர் மோதியிருக்காவிடின் 50 அடி பள்ளத்தில் விழுந்திருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மின்சார சபை பணியாளர்கள் சம்பவ இடத்துக்கு வருகை தந்து, அதிசக்தி வாய்ந்த மின்கம்பத்திலிருந்து மின்சாரத்தை துண்டித்த பிறகே, இந்த விபத்தில் சிக்கிய லொறியின் சாரதியும் உதவியாளரும் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

மலையக வைத்தியசாலை பணியாளர்களாலும்

# தொழிற்சங்க நடவடிக்கை

ரஞ்சித் ராஜபக்‌ஷ

பல அம்சக் கோரிக்கைகளை அடிப்படையாக வைத்து, நாடளாவிய ரீதியில் நேற்று (22) வைத்தியசாலை பணியாளர்களால் தொழிற்சங்கப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

அந்த வகையில், மலையகத்தின் நாவலப்பிட்டி, பதுளை ஆகிய வைத்தியசாலைகளிலும் இத்தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. குறித்த வைத்தியசாலைகளில் நேற்று பகல் 12 மணி தொடக்கம் 1 மணி வரை எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

7,500 ரூபாய் கொடுப்பனவு உள்ளிட்ட பல அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து, 48 தொழிற்சங்கங்களைச் சேர்ந்த வைத்தியசாலை பணியாளர்களால் இத்தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.



# பெரும் கடன்சுமையில் நாடு; 2029 வரை நெருக்கடி தொடரும் அபாயம்

இந்த வருடம், உருப்படியாக ஒன்றையுமே செய்யவில்லையென வருடத்தின் இறுதி மாதங்களில் புலம்பிக்கொண்டிருக்கும் பலர், அடுத்தவருடம் இதனையாவது செய்து முடிக்கவேண்டுமெனத் திட்டமிடுவர். ஆனால், கடந்த மூன்று வருடங்களில் பலரையும் எதையும் திட்டமிடவிடாதும் செயற்படவிடாதும் செய்துவிட்டது இந்தக் கொரோனா வைரஸ். இந்நிலை, இன்னும் எத்தனை வருடங்களுக்கு நீடிக்கப்போகிறது என நினைத்துகொண்டே, பலரும் நிகழ்கால வாழ்க்கையை வெறுமனே கழித்துக்கொண்டிருக்கின்றனர்.

வருமானத்துக்கு மிஞ்சிய செலவுகள், துண்டுவிழும் தொகை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்லும் நிலையில், அநாவசிய செலவுகளைக் கட்டுப்படுத்தும் செயற்பாடுகளை அரசாங்கம் மட்டுமன்றி, தனியார் நிறுவனங்களும் ஏன், ஒவ்வொரு வீடுகளிலும் முன்னெடுக்கப்படுகின்றன. இந்நிலையில்தான், நாடு பெரும் கடன்சுமையில் இருப்பதாகவும் இந்த நெருக்கடி 2029 வரையிலும் தொடருமென்ற ஆருடம் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஆட்சியதிகாரத்தில் இருக்கும் அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், கடன் நெருக்கடிகள் ஏற்படும் போதெல்லாம், வெளிநாட்டு கையிருப்பு இல்லாமல் போகும் சந்தர்ப்பங்களில் எல்லாம், முன்னைய அரசாங்கத்தை நோக்கி விரலை நீட்டிவிட்டு, கடனிலேயே மிதந்து செல்லும்; ஆட்சி மாறிவிட்டால், அதே பல்லவியையே புதிய அரசாங்கமும் பாடும்.

ஆனால், பெரும் கடன்சுமையில் இருக்கின்ற தனியார் நிறுவனங்களும் குடும்பங்களும் இவ்வாறான பல்லவியை காட்டவோ, கைவிரலை மற்றுமொருவரை நோக்கிக் காட்டவோ முடியாது. அநாவசியமான செலவுகளைக் குறைத்து, அத்தியாவசிய செலவுகளை மட்டுமே வருமானத்துக்கு ஏற்றவகையில் செலவுசெய்யவேண்டும்.

இந்நிலையில், 2021ஆம் ஆண்டுக்கான கடன் எல்லையாக 2,997 பில்லியன் ரூபாய்க்கு அங்கிகாரம் வழங்கப்பட்டிருந்தது. அந்த எல்லையை 400 பில்லியன் ரூபாயால் அதிகரித்து, 3,397 பில்லியன் ரூபாயாக ஒதுக்கீட்டுச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது. ஆக, அரசாங்கத்தின் கடல் எல்லை அதிகரிக்கப்பட்டுள்ளது.

அரச வருமானம் குறைவடைந்தமையும் சுகாதாரத் துறையின் செலவும் சமூகத்தில் வருமானம் இழந்தவர்களின் சமூகப் பாதுகாப்பு, தமது வருமானத்தில் சம்பளம் வழங்கும் நிறுவனங்களின் வருமானம் இழக்கப்பட்டமையால் சம்பளம் மற்றும் ஏனைய செலவுகளுக்காக மேலதிக நிதியொதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

சாதாரண பொதுமக்கள் இவ்வாறு கடன்எல்லையை அதிகரிக்கமுடியாது. இருப்பதை வைத்தே வாழவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. அன்றாடம் கூலி வேலை செய்பவர்கள் திண்டாடுகின்றனர்; மத்தியதர வர்க்கத்தினர் பெரும் சிரமப்படுகின்றனர். ஆக, பலபக்கங்களிலும் நெருக்கடியான நிலைமைக்கு முகக்கொடுக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளமையால், ஒவ்வொருவரும் இறுக்கமான நிலைமையொன்றையே கடைப்பிடிக்கவேண்டும்.

நாளாந்தம் அதிகரித்துச் செல்லும் அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றத்தால், சாதாரண குடும்பமொன்றின் கடன் எல்லையும் நீண்டு கொண்டே செல்கிறது. இந்நிலைக்கு முற்றுப்புள்ளி வைப்பதன் ஊடாக, சாதாரண பொதுமகனின் கடன் சுமையைக் குறைக்கலாம் என்பதே எமது அவதானிப்பாகும்.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

தன்மானம் ஒரு வெகுமானம்; தன்மானத்தை முக்கியமான பொக்கிஷமாகக் கருதாதவன், கோழையாகின்றான். ஏழைகள், பாமரர்கள் போன்றவர்களுக்கு தன்மானம் எதற்கு எனக் கருதுபவர்கள், மேலாதிக்க உணர்வுடைய அறிவிலிகள்; ஆணவக்காரர்கள்.

மிருகங்கள், பறவைகள் போன்றவற்றைச் சீண்டினால், அவை சீண்டுவோரை நோக்கி கோபாவேசப்படுகின்றன; எதிர்ப்பை, தமது பாதுகாப்பை வெளிப்படுத்துகின்றன. அதேபோல், வசதியற்றவர்களின் உள்ளக் குமுறல்களைப் பொருட்படுத்தாமல், அவர்களை அவமானப்படுத்துபவர்கள் இரக்கமற்ற கயவர்கள்.

எல்லா உயிர்களுமே, நல்லபடி வாழப் பிறந்தவைதான்; அதற்கான தார்மிக உரிமைகள், எல்லா உயிர்களுக்கும் பிறப்பிலேயே உண்டு. ஆனால், சூழல், சுற்றியிருக்கும் வளங்கள், வசதிகள் எனப் பல காரணிகளின் பற்றாக்குறைகளால், அல்லது பேராசைக்காரர்களின் அபகரிப்புகள், சுரண்டல்களால் உயிரினங்கள் துன்பப்படுகின்றன. மனிதர்களுக்கு ஆறறிவு உள்ளமையால், வாழ்க்கை முறைகளை விருத்திசெய்து விடுகின்றார்கள். ஆயினும், சமூக ஏற்றதாழ்வுகள் எனும் பாரிய வலையில், வசதியற்றவர்கள் வதைக்கப்படுகின்றனர்.

ஆனால், வறுமையில் வாடுபவனுக்கும் தன்மானம் உண்டு. கையேந்தாமலே, சுயகௌரவத்துடன் உடலை வருத்தி உழைப்போர் பலகோடி உளர். இவர்கள் தலைகுனிந்து வாழ்வதில்லை; இதுவே விரதம்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

ஐக்கிய நாடுகள் சபையில் கோட்டாவின்

# அறிவிப்புகளும் அபத்தங்களும்



புருஜோத்தமன் தங்கமயில்

உள்ளகப் பொறிமுறை ஊடாகப் பாதிக்கப்பட்ட (தமிழ்) மக்களுக்கு நீதி வழங்க முடியும் என்று, ஐக்கிய நாடுகள் பொதுச்சபை அமர்வுகளில் கலந்து கொள்வதற்காக நியூயோர்க் சென்றுள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பிரஸ்தாபித்திருக்கிறார். அத்தோடு, இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்வதற்காக, புலம்பெயர் (தமிழர்கள்) தரப்புகள் முன்வர வேண்டும் என்றும் கோரியிருக்கின்றார்.

ராஜபக்ஷர்கள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பெரும் நெருக்கடிகளைச் சந்தித்து நிற்கின்ற நிலையில், கோட்டாவின் இந்த அறிவிப்புகள் கவனம் பெறுகின்றன.

தென் இலங்கையில் பேரினவாதத்தின் காவல் முகங்களாக, ராஜபக்ஷர்கள் பார்க்கப்படுகிறார்கள். அவர்களின் ஆட்சி அதிகாரத்துக்கான எழுச்சி, தமிழ், முஸ்லிம் சிறுபான்மை மக்களுக்கு எதிரான வன்முறை, போர் வெற்றிவாதக் கோசங்களில் தங்கியிருப்பது.

ராஜபக்ஷர்கள் ஒவ்வொரு தேர்தலிலும் வெற்றிக்கான முதலீடாக, அதை இனவாதத் தீயாக வளர்த்துக் கொள்வார்கள். கடந்த ஜனாதிபதி, பொதுத் தேர்தல் ஆகியவற்றிலும் அந்தத் தீயிலேயே வெற்றியைச் சமைத்தார்கள்.

ஆனால், அந்த வெற்றி சில மாதங்களுக்குள்ளேயே காணாமல் போகும் அளவுக்கு நிலைமை மாறியது. இன்றைக்கு நாட்டு மக்கள், ராஜபக்ஷர்களின் மீது பெரும் அதிருப்தியோடு இருக்கிறார்கள். நாட்டின் பொருளாதாரத்தை அதலபாதாளத்துக்குள் தள்ளிவிட்டார்கள் என்கிற கோபம் பெருந்தீயாக எரிகின்றது.

சீனாவை மட்டும் நம்பிக்கொண்டு ஒட்டுமொத்த சர்வதேச நாடுகளையும் வேண்டா வெறுப்பாகக் கையாண்டு, நாட்டின் இராஜதந்திர நகர்வுகளை மாத்திரமல்லாமல் பொருளாதாரத்தையும் ராஜபக்ஷர்கள் சிதைத்ததுதான் அந்தக் கோபத்துக்கான காரணமாகும்.

சீனா என்கிற பெயரைக் கேட்டதும் ஒரு காலம் வரையில், தென் இலங்கை மக்களிடம் பெரும் வரவேற்புக் காணப்பட்டது. அது, அமெரிக்கா உள்ளிட்ட மேற்கு நாடுகள் மீதான அதிருப்தியால் எழுந்தது.

ஆனால், இன்றைக்கு மேற்கு நாடுகளையும் விட, சீனா மீதான அதிருப்தி மக்களிடம் எழுந்திருக்கின்றது. அது, நாட்டைத் திட்டமிட்டு பெரும் கடனாளியாக்கிவிட்டமை மீதான கோபம்.

இன்றைக்கு சீனாவும் தன்னுடைய கடன் வளங்கும் மூலங்களை மட்டுப்படுத்திவிட்டு, ராஜபக்ஷர்களை நோக்கி, கடன்களுக்கான வட்டிகளைக் கோருகின்றது. அந்த வட்டிகளுக்காக, நாட்டின் பிரதான பகுதிகளையெல்லாம் கேட்டுக் கொண்டிருக்கின்றது.

இவ்வாறான நிலையை, காலம் கடந்து உணர்ந்திருக்கின்ற ராஜபக்ஷர்கள், மேற்கு நாடுகளை நோக்கி, புதிதாக நேசக்கரம் நீட்ட எத்தனிக்கிறார்கள். அதனைத்தான், ஐக்கிய நாடுகள் பொதுச் சபை அமர்வுகளில் கலந்து கொள்ளச் சென்ற கோட்டாவின் அறிவிப்புகள் வெளிப்படுத்தி நிற்கின்றன.

புலம்பெயர் அமைப்புகள், தனிநபர்கள் உள்ளிட்ட 400க்கும் மேற்பட்ட தரப்புகள் மீதான தடையை, கடந்த மார்ச் மாதம் இலங்கை அரசு வர்த்தமானியில் அறிவித்தது. இந்தத் தரப்புகளில் பெரும்பாலான அமைப்புகள், தனிநபர்கள் மீதான தடை, கடந்த நல்லாட்சிக் காலத்தில் நீக்கப்பட்டிருந்தது.

ஆனால், ராஜபக்ஷர்கள், தங்களின் ஆட்சி அதிகார வரலாறு, தமிழர் விரோத நிலைப்பாடுகளால் நிலைத்திருப்பது என்பதை அறிவிப்பதற்காகவே, புலம்பெயர் அமைப்புகள், தனிநபர்கள் மீதான தடையை மீண்டும் அமல்படுத்தினார்கள்.

எனினும், இன்றைக்கு புலம்பெயர் தரப்புகளை முதலீடு செய்வதற்கு, கோட்டா அழைக்கும் நிலை வந்திருக்கின்றது. அதற்குப் பொருளாதாரம் நலிவடைந்து, நாடு திவாலாகும் நிலையை அடைந்திருப்பதே ஒரே காரணமாகும்.

ஆயுத மோதல்கள், முள்ளிவாய்க்காலில் முடிவுக்கு வந்த போது, வடக்கு - கிழக்கில் மட்டுமல்லாது, நாடு முழுவதுமாக முதலீடுகளை மேற்கொள்வதற்கான முன்வைப்புகளோடு புலம்பெயர் தமிழர் தரப்புகள் முன்வந்தன. ராஜபக்ஷர்களின் முதல் ஆட்சிக் காலத்தில், அதற்காகப் பல தடவைகள் பேச்சுகளும் நடத்தப்பட்டன.

ஆனாலும், சீனா வழங்கும் கடன்களால் செழிக்க முடியும் என்கிற நம்பிக்கையும் தமிழர் விரோதப் போக்கும், புலம்பெயர் தரப்புகளை ராஜபக்ஷர்கள் விரட்டியடிப்பதற்கு காரணமாயின.

குறிப்பாக, வடக்கு மாகாண சபைத் தேர்தல்களில், தமிழ்த் தேசிய கூட்டமைப்பு வெற்றிபெற்று ஆட்சி அமைத்ததும், முதலமைச்சர் நிதியமொன்றை ஆரம்பித்து, அதனூடாகப் புலம்பெயர் தரப்புகளினூடாக முதலீடுகளை உள்வாங்க முயற்சிக்கப்பட்ட போதும், அதனை ராஜபக்ஷர்கள் நிராகரித்தார்கள். அவர்களைத் தொடர்ந்து வந்த நல்லாட்சி அரசாங்கமும் அதனை நிராகரித்தது.

முள்ளிவாய்க்கால் முடிவுகளுக்குப் பின்னராக நாள்களில், குறிப்பாக வடக்கு மாகாண சபை தேர்தலுக்குப் பின்னரான காலத்தில், புலம்பெயர் தரப்புகளை நாட்டில் முதலிடுவதற்கு அனுமதித்திருந்தால், நாட்டின் பொருளாதாரத்தில் கணிசமான முன்னேற்றத்துக்கான வாய்ப்புகள் இருந்திருக்கும்.

குறிப்பாக, இளைஞர்களுக்கான வேலை வாய்ப்புகள் இலட்சக்கணக்கில் உருவாக்கப்பட்டிருக்கும். கடந்த மார்ச் மாதம், புலம்பெயர் தரப்புகள் மீதான தடையை அறிவித்துவிட்டு, ஆறு மாதங்களிலேயே புலம்பெயர் தரப்புகளை முதலீடுகளை செய்ய அழைப்பது என்பது, 'ராஜபக்ஷர்கள் என்னத்தைத் தின்றால் பித்தம் தெளியும்' என்கிற நிலைக்கு வந்திருப்பதைக் காட்டுகின்றது.

முள்ளிவாய்க்கால் இறுதி மோதல் நாள்களில், தங்களது உறவுகளை இராணுவம் உள்ளிட்ட பாதுகாப்புத் தரப்பினரிடம் நேரடியாகக் கையளித்த ஆயிரக்கணக்கானவர்கள், இன்னமும் உயிரோடு இருக்கிறார்கள். தாங்கள் உயிரோடு கையளித்தவர்களின் நிலை என்ன, அவர்கள் மீண்டும் வீடு திருப்புவார்களா என்பதை அறிவதற்காக, கடந்த 12 வருடங்களாக அவர்கள் பல தரப்புகளின் கதவுகளையும் தட்டிவிட்டார்கள்.

இலங்கை அரசின் கதவுகள் எப்போதோ மூடப்பட்ட போதிலும், தங்களது உறவுகள் உயிரோடு திரும்பிவிடுவார்கள் என்கிற நம்பிக்கை, அந்த மக்களிடம் கதவுகளை ஓங்கித் தட்டுவதற்கான ஓர்மத்தை வழங்குகின்றது.

ஆனால், அந்த மக்களின் உறவுகளை உயிரோடு கையேற்ற இலங்கை அரச கட்டமைப்போ, மரணச் சான்றிதழ்களை வழங்குவதற்கு ஆர்வமாக இருக்கின்றது. ஒருவர் மரணமடைந்துவிட்டார் என்றால், அந்த மரணம் எவ்வாறு நிகழ்ந்தது, எப்போது நிகழ்ந்தது என்பதை அறிவித்து வழங்கப்படும் ஆவணமே, மரணச் சான்றிதழாகும்.

விடயம் அப்படியிருக்க, உயிரோடு கையளிக்கப்பட்டவர்கள் எவ்வாறு மரணித்தார்கள்; மரணத்தின் சூத்திரதாரிகள் யார் என்பதை அறிவிக்காமல், எவ்வாறு மரணச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ள முடியும்?

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் சார்ந்து, இலங்கையின் ஆட்சியிலிருந்த அனைத்து அரசாங்கங்களும் மரணச்சான்றிதழை வழங்கி, விடயத்தை முடிக்கவே முயற்சிக்கின்றன.

மாறாக, அது தொடர்பில் எழுப்பப்படும் நியாயமான எந்தக் கேள்வியையும் எதிர்கொள்வதற்குத் தயாராக இருப்பதில்லை.

இப்போது, காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு மரணச்சான்றிதழ் வழங்குவது தொடர்பில், கோட்டா அறிவித்திருப்பதும் அவ்வாறானதோர் அறிவித்தலே! அதிலும் முக்கியமாக, முள்ளிவாய்க்கால் இறுதி நாள்களில் இராணுவம் உள்ளிட்ட பாதுகாப்புத் தரப்பினருக்கு உத்தரவுகளை வழங்கும் அதிகாரியாகச் செயற்பட்டவர்களில் கோட்டா பிரதானமானவர்.

அப்போது, பாதுகாப்பு அமைச்சராக இருந்த மஹிந்த ராஜபக்ஷவுக்கு அடுத்து, அந்த அமைச்சின் செயலாளராக செயற்பட்ட கோட்டாவே பொறுப்புக்கூற வேண்டியவராகிறார். ஆனால், அவரோ தனக்கும் முள்ளிவாய்க்காலில் வைத்து பாதுகாப்புத் தரப்பினரிடம் கையளிக்கப்பட்டவர்களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லாதது மாதிரியாகப் பேசிக் கொண்டிருக்கிறார்.

போர்க்குற்றத்துக்கான ஏதுகைகள் கொண்டிருக்கின்ற ஒரு விடயத்தை, மரணச் சான்றிதழ் ஊடாகக் கடந்துவிட முடியும் என்பது, எந்தக் காலத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாது. அப்படிப்பட்ட நிலையில், பாதிக்கப்பட்ட மக்களிடம் உள்ளகப் பொறிமுறை ஊடாக நீதியை வழங்குவது தொடர்பில், கோட்டா பிரஸ்தாபித்திருப்பது அபத்தங்களின் நீட்சி.

கொலைக் குற்றத்தைப் புரிந்த ஒருவனிடம், அந்தக் கொலை தொடர்பிலான விசாரணையைக் கையளிப்பதன் மூலம், நீதியான விசாரணை நடத்தப்பட்டு, பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கப்பட்டுவிடும் என்கிற புதிய நிலைப்பாட்டைக் கட்டமைப்பதற்கு, ராஜபக்ஷர்களும் பேரினவாத சக்திகளும் தொடர்ச்சியாக முயற்சித்து வருகின்றன.

அதாவது, மிருசுவில் படுகொலைக் குற்றவாளியான சுனில் ரட்ணாயக்கவுக்கும் பாரத லக்ஷ்மன் பிரேமசந்திர கொலை வழக்கின் குற்றவாளியான துமிந்த சில்வாவுக்கும் பொது மன்னிப்பு வழங்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டதும் ராஜபக்ஷர்களின் புதிய நீதியின் படியே!

அவ்வாறான நீதியொன்றை வழங்குவதற்காகவே, உள்ளகப் பொறிமுறை ஊடாக, விடயங்களைக் கையாளலாம் என்று கோட்டா அறிவித்திருக்கின்றார்.

இந்த அறிவிப்புகளால் எல்லாம், தமிழ் மக்களையும் சர்வதேசத்தையும் ஏமாற்றிவிடலாம் என்பதெல்லாம் ராஜபக்ஷர்களின் பகற்கனவு என்பதே யதார்த்தம் ஆகும்.

## கடிதங்கள்

### நீரில் மூழ்கியுள்ள உப்பு வயல்கள்

திருகோணமலை மாவட்டத்தின் கிண்ணியா பிரதேசத்திலுள்ள உப்பளங்கள், நீரில் மூழ்கியுள்ளதால், உப்புச் செய்கையாளர்கள் தமது வருமானத்தை இழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வெள்ளிக்கிழமை (17) பெய்த பலத்த மழையால், கச்சக்கொடித்தீவு, முனைச்சேனை ஆகிய இடங்களில் உள்ள உப்பு வயல்கள், நீரில் மூழ்கிக் காணப்படுகின்றன.

பலத்த மழை பெய்ததன் விளைவாக, 130 ஏக்கர் நிலப் பரப்பிலுள்ள உப்பளங்கள் நீரில் மூழ்கிக் காணப்படுவதால், உப்பு உற்பத்தியை மட்டும் வாழ்வாதாரமாகக் கொண்ட, இப்பிரதேசத்திலுள்ள 350 பயனாளிகள், இத்தொழில் மூலம் கிடைக்கும் வருமானத்தை இழந்துள்ளனர்.

எனவே, தொழிலை இழந்து, பாதிக்கப் பட்டுள்ள கச்சக்கொடித்தீவு, முனைச்சேனை உப்புசெய்கையாளர்களின் பிரச்சினைகள் குறித்து ஆராய்ந்து தீர்வு பெற்றுத்தருமாறு கோரிக்கை முன்வைக்கப்படுகின்றது.

–அ. அச்சுதன்



சென்னை

### கூட்டணியில் எதிர்பார்த்தளவு

# இடங்கள் கிடைக்கவில்லை

உள்ளூராட்சி தேர்தலில், திராவிட முன்னேற்ற கழக கூட்டணியில் நாங்கள் எதிர்பார்த்த அளவு இடங்கள் கிடைக்கவில்லை என்று, விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல். திருமாவளவன் தெரிவித்துள்ளார்.



நீட் தேர்வு பயத்தால், தற்கொலை செய்து உயிரிழந்த வேலூர் மாவட்டம், காட்பாடி மாணவி சௌந்தர்யாவின் குடும்பத்துக்கு, நேரில் சென்று ஆறுதல் கூறினார் திருமாவளவன்.

அதன்போது திருமாவளவன் செய்தியாளர்களிடம் கூறுகையில், “நீட் தேர்வில் உள்ள ‘மைனஸ் மார்க்’ எனப்படுவது, மாணவர்களை அச்சுறுத்துகிறது. காட்பாடி மாணவி சௌந்தர்யா பரீட்சையில் தோல்வி அடைவோம் எனத் தெரிய வந்ததால், தூக்குமாட்டி தற்கொலை செய்துகொண்டுள்ளார். பயிற்சிக்கு சென்று பயின்ற மாணவி, பரீட்சைப் பயம் காரணமாக தற்கொலை செய்துகொண்டுள்ளமை வேதனைக்குரியது.

தி.மு.க தலைமையிலான அனைத்து கட்சி கூட்டத்தில் சமூக நீதி மாநாடு நடத்தி, முதலமைச்சர் பங்கேற்கும் போராட்டத்தை நடத்தவுள்ளோம். இதற்கெல்லாம் இடம் அளிக்காத வகையில், நீட் விலக்கு சட்டமூலத்துக்கு குடியரசு தலைவர் ஒப்புதல் அளிக்க வேண்டும். நீட்டால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கும் அவர்களின் குடும்பங்களுக்கும் அரசாங்கத்தின் சார்பில் நிதி அளிக்க வேண்டும். மாநில அரசாங்கத்தின் சட்டத்தை குடியரசு தலைவர் அங்கிகரிக்க வேண்டும். எதிர்க்கட்சிகளும் ஒருமித்த கருத்துகளை சொல்ல வேண்டும். தி.மு.க கூட்டணியில் உள்ள எல்லாக் கட்சிகளுக்கும் உள்ளூராட்சி தேர்தலில் இடம் ஒதுக்க வேண்டும். இவைகளை அளவுகோலாகக் கொண்டு பேச்சுவார்த்தை நடக்கிறது. எதிர்பார்த்த அளவு இடங்கள் எங்களுக்குக் கிடைக்கவில்லை. நல்லிணக்கமான பேச்சுவார்த்தை ஆறுதல் அளிக்கிறது. தனிச் சின்னத்தில் போட்டியிட்டு வெற்றி பெறுவோம் எனக் கூறினார்.

சென்னை

### மத நல்லிணக்கத்துக்கு எதிரானோரை

# கைது செய்க



மத நல்லிணக்கத்துக்கு எதிரானோரைக் கைது செய்ய வேண்டும் என, தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் கே.எஸ். அழகிரி வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

**“ இஸ்லாமியர்களைப் பற்றியும் அவர்களால் வணங்கப்படுகிற இறை தூதர் முஹம்மது நபி பற்றியும் அவர்களின் தொழுகை முறைகளைப் பற்றியும் அநாகரிகமாக விமர்சித்துப் பேசி, அதை வீடியோவில் பதிவு செய்து வெளியிட்டிருக்கிறார். இதுகுறித்து சிவகுமார் கைது செய்யப்பட்டிருக்கிறார்**

மேலும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது; யோகக் குடில் சிவயோகி சிவகுமார் என்ற நபர், இஸ்லாமியர்களைப் பற்றியும் அவர்களால் வணங்கப்படுகிற இறை தூதர் முஹம்மது நபி பற்றியும் அவர்களின் தொழுகை முறைகளைப் பற்றியும் அநாகரிகமாக விமர்சித்துப் பேசி, அதை வீடியோவில் பதிவு செய்து வெளியிட்டிருக்கிறார். இதுகுறித்து சிவகுமார் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

இந்த நடவடிக்கையை மேற்கொண்ட பொலிஸாரைப் பாராட்ட கடமைப்பட்டிருக்கிறோம். மதநல்லிணக்கத்துக்கு உலை வைக்கின்ற வகையில், கருத்துகளை வெளியிடுகிற சிவகுமார் போன்ற சமூக விரோதிகளை, குண்டர் சட்டத்தில் கைது செய்து கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மும்பை

# ஜாதகப் பொருத்தம் இல்லையென விலக முடியாது

திருமணம் செய்து கொள்வதாக வாக்குறுதி அளித்து, பெண்ணைப் பலாத்காரம் செய்துவிட்டு, ஜாதகப் பொருத்தம் இல்லை எனக் கூறி, அந்தப் பெண்ணிடம் இருந்து விலகுவதை அனுமதிக்க முடியாது என, மும்பை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

மும்பையைச் சேர்ந்த ஒருவர், தன்னுடன் வேலை பார்த்த பெண்ணைக் காதலித்தார். திருமணம் செய்து கொள்வதாக வாக்குறுதி அளித்து, அந்தப் பெண்ணுடன் பலமுறை உறவு கொண்டார். ஒரு கட்டத்தில் அந்தப் பெண் கர்ப்பம் அடைந்தார். வற்புறுத்தல் காரணமாக கருக் கலைப்புச் செய்தார். நாளடைவில் அந்தப் பெண்ணிடம் இருந்து காதலன் விலகத் தொடங்கினார்.

திருமணம் செய்து கொள்ளும்படி அந்தப் பெண் கேட்டபோது, “ஜாதகப் பொருத்தம் இல்லாததால் திருமணம் செய்து கொள்ள முடியாது” என்றார். அந்த பெண் அளித்த புகாரின் அடிப்படையில், அவர் மீது பாலியல் பலாத்காரம், மோசடி வழக்குப் பதிவு செய்யப்பட்டது. இந்த வழக்கு மும்பை உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது.

அப்போது, ‘மனுதாரருக்கு பெண்ணை ஏமாற்றுவது நோக்கமல்ல; ஜாதகப் பொருத்தம் இல்லாததால் திருமணம் செய்து கொள்ளவில்லை. எனவே வழக்கில் இருந்து அவரை விடுவிக்க வேண்டும்’ என, வாதிடப்பட்டது.

இதைக் கேட்ட நீதிபதி, “மனுதாரர் பொய் வாக்குறுதி அளித்து, அந்தப் பெண்ணை பாலியல் தேவைகளுக்கு பயன்படுத்திக் கொண்டதற்கான முகாந்திரம் உள்ளது. எனவே, ஜாதகப் பொருத்தத்தைக் காரணமாகச் சொல்லி, திருமணத்தைத் தவிர்ப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது” என, உத்தரவிட்டார்.




பாட்னா

# கணவரின் உடலை காட்டிய இரசாயன வாடை



பீகாரில் ஒரு பெண், தனது கள்ளக்காதலனின் உதவியுடன் கணவரைக் கொன்ற பின்னர், உடலைத் துண்டாக்கி, இரசாயனங்களை ஊற்றி, ஆதாரங்களை அழிக்க முயன்ற சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

இரசாயன வாடை அடித்து, பக்கத்து வீட்டில் உள்ளவர்கள் பொலிஸுக்குத் தகவல் கொடுத்தனர். நேரில் வந்து பார்த்து, பொலிஸார் கடும் அதிர்ச்சி அடைந்தனர். உயிரிழந்தவரின் மனைவி, கள்ளக் காதலன், மனைவியின் சகோதரி ஆகியோரைக் கைது செய்தனர்.

முசாபர்பூரில் உள்ள சிக்கந்தர்பூர் நகர் பொலிஸ் எல்லைப் பகுதியில் வசித்த, நபரின் மனைவிக்கு, அவரின் நண்பருடன் கள்ளக்காதல் ஏற்பட்டது. இருவரும் ஜாலியாக இருந்து வந்துள்ளனர்.

ஒருகட்டத்தில், மகிழ்ச்சிக்கு தடையாக இருக்கும் தனது கணவனை கொன்றுவிட மனைவி முடிவு செய்கிறார். கள்ளக்காதலன் அதற்கு முழு ஒத்துழைப்பு அளிப்பதாக உறுதி அளித்துள்ளான்.

இந்நிலையில், தனது கணவனைக் கொலை செய்வதற்கு, தனது தங்கை மற்றும் தங்கையின் கணவரை அழைத்துக்கொண்டார். கள்ளக்காதலன், மனைவி, உள்பட 4 பேரும் சேர்ந்து கணவனை அடித்துக் கொலை செய்தனர். அதன்பின்னர் தடயங்களை அழிக்க விரும்பிய இவர்கள், இறந்த உடலைத் தடயமே இல்லாமல் அழிப்பதற்காக, உடலைப் பல துண்டுகளாக வெட்டினார்கள். பின்னர், இரசாயனத்தை பயன்படுத்தி பிணத்தைக் கரைக்க முயன்றனர். ஆனால், இரசாயனங்கள் பயன்படுத்தியால் வெடித்து தீப்பற்றியது. இதையடுத்து அக்கம் பக்கத்தினர் என்ன வெடித்து தீ வருகிறது என்று பொலிஸுக்கு தகவல் கொடுத்தனர்.

இதையடுத்து இந்த நால்வரும் கைதுசெய்யப்பட்டனர்.

இந்தியா

# அமெரிக்கா சென்றார் பிரதமர் மோடி



பிரதமர் நரேந்திர மோடி நான்கு நாள்கள் பயணமாக நேற்று (22) அமெரிக்கா பயணமானார். இந்தப் பயணத்தின் போது, ஐக்கிய நாடுகள் பொதுச் சபை கூட்டத்தில் பேசும் பிரதமர், அமெரிக்கா ஜனாதிபதி உட்பட, பல முக்கிய தலைவர்களை தனித்தனியே சந்தித்துப் பேசுகிறார்.

பிரதமர் மோடி, அமெரிக்காவின் முக்கிய தொழிலதிபர்களுடன் ஆலோசனை நடத்தவுள்ளார். இதன்போது, ஆப்பிள் நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரியையும் சந்தித்துப்பேசவுள்ளார். பின்னர் ஜப்பான், அவுஸ்திரேலியா, பிரிட்டன் பிரதமர்களையும் தனித்தனியாகச் சந்தித்துப் பேசுகிறார்.

எதிர்வரும் 24 ஆம் திகதி, அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனை சந்திக்கும் பிரதமர் மோடி, ஆப்கானிஸ்தான் விவகாரம், பருவநிலை மாற்ற பாதிப்புகளை தடுப்பதற்கான வழிமுறைகள், சீனாவின் நடவடிக்கைகள் எனப் பல்வேறு முக்கிய விடயங்கள் குறித்து விவாதிக்க உள்ளார்.

# லொஹானிடமிருந்து துப்பாக்கியை பறிக்கவும்

பா.நிரோஸ்



இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தவிடமுள்ள கைத்துப்பாக்கியை பறிக்க சபாநாயகர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் சபையில் கோரிக்கை விடுத்தார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய (22) அமர்வின்போது, அநுராதபுர சிறைச்சாலையில் உள்ள தமிழ்க் கைதிகள், துப்பாக்கி முனையில் அச்சுறுத்தப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் ஒழுங்குப் பிரச்சினை எழுப்பி உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த சிறைச்சாலையில் உள்ள சி.சி. ரி.வி கமெராக்களில் பதிவாகிய காட்சிகள் அழிக்க முடியாது என கூறியிருந்தார்.

ஆனால், அவரின் கருத்துக்குப் பின்னர், தற்போது வெலிக்கடை, அநுராதபுர சிறைச்சாலைகளில் சி.சி.ரி.வி கமெராக்கள் இல்லை என அதிகாரிகள் கூறுயிருப்பது சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ளது.

எனினும் இந்த சி.சி. ரி.வி கமெராக்களில் பதிவாகியுள்ள காட்சிகள் அழிக்கப்படாதிருப்பது உறுதி செய்யப்பட வேண்டும். லொஹான் ரத்வத்தவிடமுள்ள கைத்துப்பாக்கியை பறிப்பதற்கு சபாநாயகர் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் இதன்போது வலியுறுத்தினார்.

# ‘ஜனாதிபதியிடம் யானை அனுமதிப்பத்திரமா?’

### சி.பியின் பதிலால் சபையில் சிரிப்பு

பா.நிரோஸ்



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பெயரில் யானைகளை வைத்திருப்பதற்கான அனுமதிப்பதிரம் உள்ளதாக என எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் மயந்த திஸாநாயக்க சபையில் கேள்வி எழுப்பியுள்ளார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய (22) அமர்வில் கலந்துக்கொண்டு வாய்மூல விடைக்கான வினாவை முன்வைத்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினார்.

மயந்த திஸாநாயக்கவின் கேள்விக்குப் பதிலளித்த வனஜீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சர் சி.பி. ரத்நாயக்க, “இப்போது இல்லை. தேடிப் பார்த்து சொல்கிறேன்.” என பதிலளித்தார்.

சி.பியின் பதிலால் சபையிலிருந்து எதிர்க்கட்சி எம்.பிகள் வாய்விட்டு சிரித்தனர்.

# 100 மில்லியன் நிதியைத் திருட முயற்சிக்கிறார்கள்

பா.நிரோஸ்



இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தில் 100 மில்லியனுக்கும் அதிகமான நிதி இருப்பதாகத் தெரிவிக்கும் அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் ஹரீன் பெர்ணான்டோ, அதைத் திருடுவதற்கு சிலர் முயற்சிக்கிறார்கள் எனவும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய (22) அமர்வில் கலந்துகொண்டு ஒழுங்குப் பிரச்சினை எழுப்பி உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் தலைவராக நானும், பொதுச்செயலாளராக வடிவேல் சுரேஸ் எம்.பியும் இருக்கிறோம். இச்சங்கத்தின் தலைமையகத்துக்குள் முன்னாள் அமைச்சர்கள் அத்துமீறி நுழைந்து வடிவேல் சுரேஸை அச்சுறுத்தியுள்ளனர். இது தொடர்பில், வெலிக்கடை பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்தும் இச்சம்பவம் தொடர்பில் அப்பிரதேச பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி இதுவரையில் எந்தவிதமான விசாரணைகளையும் மேற்கொள்ளவில்லை.

இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தில் 100 மில்லியனுக்கும் அதிகமான நிதி காணப்படுகிறது. இந்த நிதிக்கு எதுவும் நடந்தால் அது தொடர்பில் நானும் வடிவேல் சுரேஸும் பொறுப்புக்கூற வேண்டும். ஏன் சிறைச்சாலைக்குக் கூட செல்ல வேண்டிய நிலை ஏற்படலாம்.

இதேவேளை, முன்னாள் பிரதமர் ரணில் விக்கரமசிங்க கூறுவதுபோல, வழக்கு நீதிமன்றில் நடைபெற்று வருகிறது. அது உண்மை. இங்குள்ள நிதியை நாம் ஒருபோதும் திருடப்போவதில்லை. ஆனால், இதைத் திருடுவதற்கு சிலர் முயற்சிக்கிறார்கள் என்றார்.

பாராளுமன்ற உறுப்பினர் ஹரீன் பெர்ணான்டோவுக்கு எதிராக, எந்தவிதமான வழக்குகளும் இல்லை. நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியதன் பின்னர், வடிவேல் சுரேஸின் வரப்பிரசாதம் மீறப்பட்டிருந்தால், அது தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

# ‘பார்களுக்கு திறப்பு; பாராளுமன்றுக்கு பூட்டு’

பா.நிரோஸ்



மதுபானசாலைகளை (பார்களை) திறந்து வைத்துள்ள அரசாங்கம், பாராளுமன்றத்தை மூடி வைத்திருப்பதாக எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவும் எம்.பியுமான லக்‌ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளதோடு, நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைந்திருந்தால், ஏன் பாராளுமன்ற அமர்வுகளை இடைநிறுத்துகிறீர்கள் எனவும் கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய (22) அமர்வில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், இன்றும் (23), நாளை (24) இருந்த பாராளுமன்ற அமர்வுகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன. கடந்த வருடமும், இந்த வருடமும் 25 அமர்வுகள் இல்லாது செய்யப்பட்டுள்ளன. நாட்டில் மதுபானசாலைகள் திறந்துள்ளன. எனினும் பாராளுமன்றத்தை மூடி வைத்திருக்கிறார்கள்.

இதேவேளை, ஆளுங்கட்சியின் நிகழ்ச்சி நிரலுக்கு அமையவே எதிர்க்கட்சியும் செயற்பட வேண்டியிருக்கிறது. அமெரிக்காவிலிருந்து வந்தவர்கள், நேற்று முன்தினம் இரவு 12 மணிக்கு கெரவலப்பிட்டிய யுக்தனவி அனல்மின் நிலையத்தின் 40 சதவீதத்தை கையெழுத்திட்டு பெற்றுக் கொண்டுள்ளார்கள். பாராளுமன்றம் மூடியிருந்தால், இது தொடர்பில் எவ்வாறு கதைப்பது எனவும் அவர் வினவினார்.

# சாணக்கியனின் குற்றச்சாட்டுகளை முழுமையாக மறுத்தது அரசாங்கம்



பா.நிரோஸ்

கிழக்கு மாகாணத்திலிருந்து மணல் ஏற்றுமதி செய்யப்பட்டதாக சாணக்கியன் எம்.பி கடந்த காலங்களில் முன்வைத்த குற்றச்சாட்டுகளை அமைச்சர் மஹிந்த அமரவீர முழுமையாக மறுத்துள்ளதோடு, சரியான தகவல்களை வைத்துக்கொண்டு குற்றச்சாட்டுகளை முன்வைக்குமாறும் சாணக்கியன் எம். பிக்கு, மஹிந்த அமரவீர ஆலோசனை வழங்கினார்.

மாலைதீவில் தீவு ஒன்றை அமைப்பதற்கு கிழக்கு மாகாணத்திலிருந்து மணல், மாலைதீவுக்கு ஏற்றப்படுவதாகவும், இதில் சுதந்திர கட்சியின் அமைச்சர் ஒருவருக்கும், பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினருக்கும் தொடர்பு உள்ளதாக சாணக்கியன் பாராளுமன்றத்தில் குற்றம் சுமத்தியிருந்தார்.

ஆப்கானிஸ்தான்

ஐ.நா பொதுச்சபை கூட்டத்தில் பங்கேற்க

# தலிபான்கள் ஆர்வம்

ஐக்கிய நாடுகளின் புதிய நிரந்தரப் பிரதிநிதியாக ஆப்கானிஸ்தான் சார்பில் முஹம்மது சுஹைல் ஷாஹீனை நியமித்துள்ள தலிபான்கள், ஐ.நா பொதுச்சபைக் கூட்டத்தில் ஆப்கான் பங்கேற்கவும் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

கடந்த 20 ஆண்டுகளாக அமெரிக்க, நேட்டோ படைகளுக்கு எதிராகப் போராடிய தலிபான்கள், அமெரிக்க, நேட்டோ படைகள் வெளியேறத் தொடங்கியவுடன் ஆப்கானிஸ்தானை தங்கள் பிடிக்குள் கொண்டுவந்தனர்.

கடந்த ஒகஸ்ட் 15 ஆம் திகதி ஆப்கானிஸ்தான் முழுமையாக



தலிபான்கள் வசமாகிய பின்னர், 70க்கும் மேற்பட்டோர் கொண்ட இடைக்கால அரசை தலிபான்கள் அறிவித்தனர்.

நியூயோர்க் நகரில் செப்டெம்பர் 25ஆம் திகதி நடைபெறவுள்ள ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தில், சுஹைல் ஷாஹீன் பங்கேற்கவும், வெளிவிவகார அமைச்சர் உரையாற்றவும் தலிபான்கள் விருப்பம் தெரிவித்துள்ளனர்.

தலிபான் வெளிவிவகார அமைச்சர் அமீர்கான் முத்தாகி ஐ.நா பொதுச்செயலாளர் அன்டோனியோ குடெரெஸுக்கு எழுதியுள்ள கடிதத்தில், ஆப்கான் சார்பில் ஐ.நா கூட்டத்தில் தான் பங்கேற்று உரையாற்ற அனுமதி கோரியுள்ளார்.

அமெரிக்கா, சீனா, ரஷ்யாவை உள்ளடக்கிய ஒன்பது பேர் கொண்ட ஐ.நா குழுவுக்கு ஆப்கானின் கோரிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தான்

அவுஸ்திரேலியா

# மெல்போர்னில் நிலநடுக்கம்

அவுஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரில் இருந்து 200 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள மன்ஸ்பீல்ட் பகுதியில் நேற்று அதிகாலை 6 ரிச்டர் அளவிலான நில நடுக்கம் ஏற்பட்டதாக அந்நாட்டின் புவியில் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

10 கிலோ மீற்றர் ஆழத்தில் ஏற்பட்ட நில நடுக்கத்தால் கட்டடங்கள் குலுங்கியதால் பீதியடைந்த பொதுமக்கள் வீடுகளை விட்டு வெளியேறி வீதிகளில் தஞ்சம் அடைந்தனர்.

அங்குள்ள சேப்பல் வீதியிலுள்ள கட்டடம் ஒன்று சேதம் அடைந்ததுடன், அதிலிருந்த செங்கற்கள் இடிந்து விழுந்தன. நில நடுக்கத்தால் பெரிய சேதங்கள் ஏற்பட்டதற்கான தகவல் எதுவும் இல்லை என்று பிரதமர் ஸ்கொட் மோரிசன் தெரிவித்துள்ளார்.



ஜேர்மனி




மாஸ்க் அணியச் சொன்ன

# ஊழியர் சுட்டுக் கொலை

மாஸ்க் அணியச் சொன்னதால் எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியரை வாடிக்கையாளர் ஒருவர் தலையில் சுட்டுக் கொலை செய்த சம்பவம் ஜேர்மனிய மக்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இடார் ஒபர்ஸ்டீன் பகுதியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தின் சிறு பல்பொருள் அங்காடிக்கு வந்த நபரொருவர், தனக்கு சில பியர் போத்தல்கள் வேண்டும் என்று கேட்டுள்ளார்.

அப்போது கல்லாவில் இருந்த இளைஞர் (பகுதிநேர வேலைசெய்யும் மாணவர்) அந்த நபரை மாஸ்க் அணியுமாறு வலியுறுத்தி உள்ளதுடன், ஜேர்மனியில் பொது இடங்களில் மாஸ்க் அணிவது கட்டாயம் என்ற விதியை இளைஞர் எடுத்துரைத்துள்ளார்.

இதனையடுத்து இளைஞருக்கும் குறித்த நபருக்கும் இடையே வாக்குவாதம் இடம்பெற்றுள்ளதுடன், வாக்குவாதத்துக்குப் பின்னர், அந்த நபர் அங்கிருந்து ஆவேசமாகப் புறப்பட்டுச் சென்றுள்ளார்.

அரை மணி நேரம் கழித்து மீண்டும் அங்கு மாஸ்க் அணிந்து வந்த நபர், தனக்குத் தேவையானதை வாங்கிக் கொண்டு மாஸ்க்கை அகற்றி, மீண்டும் அந்த இளைஞரிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளார்.

பேசிக் கொண்டிருந்தபோதே மறைத்து வைத்திருந்த கைத் துப்பாக்கியை திடீரென எடுத்து, இளைஞரின் தலையில் சுட்டுள்ளார். அதன் பின்னர் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று சரணடைந்த 49 வயதான அந்த நபர், தான் கொலை செய்துவிட்டதாக ஒப்புக் கொண்டதை அடுத்து அவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் நாளுக்கு நாள் தனது உரிமைகளில் அத்துமீறும் வகையில் நெருக்கடியைத் தருவதால், அந்த அழுத்தத்தில் இருந்து விடுபட துப்பாக்கிச் சூட்டில் ஈடுபட்டதாக அந்த நபர் வாக்குமூலம் அளித்துள்ளார்.

அமெரிக்கா

தடுப்பூசி செலுத்தாததால்

# வீதியில் உணவருந்திய பிரேசில் ஜனாதிபதி

அமெரிக்கா சென்றுள்ள பிரேசில் ஜனாதிபதி ஜெய்ர் போல்சனேரோ, தடுப்பூசி செலுத்திக் கொள்ளாத காரணத்தால் அமெரிக்காவில் உள்ள உணவு விடுதிக்குள் நுழைய அனுமதி மறுக்கப்பட்டு, சாலையோர உணவகத்தில் உணவருந்தும் புகைப்படங்கள் வைரலாகி வருகின்றன.

ஐ.நா பொதுச் சபை கூட்டத்தில் கலந்து கொள்ள நியூயோர்க் சென்றுள்ள பிரேசில் ஜனாதிபதி, சக அமைச்சர்களுடன் சேர்ந்து இரவு நேர உணவுக்காக விடுதி ஒன்றுக்குள் நுழைந்துள்ளார்.

அங்கு இருந்த பாதுகாவலர்கள் கொரோனா தடுப்பூசி செலுத்திகொண்டதற்கான சான்றிதழை கேட்டுள்ளனர். அதற்கு அவர் தடுப்பூசி இன்னும் செலுத்திக்கொள்ளவில்லை எனத் தெரிவித்ததை அடுத்து, கொரோனா தடுப்பூசி செலுத்திக் கொள்ளாததால் அவருக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

போல்சனேரோ உள்ளிட்ட தலைவர்கள், தடுப்பூசி செலுத்திக் கொள்ள வேண்டுமென நியூயோர்க் மேயர் பில் டே பலசியோ அறிவுறுத்தி உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



அமெரிக்கா

பிளவுபட்ட உலகில்

# புதிய பனிப்போரை உருவாக்க முயலவில்லை

பிளவுபட்ட உலகில் மீண்டும் ஒரு புதிய பனிப்போரை உருவாக்க நாங்கள் முயற்சிக்கவில்லை. அமைதியைப் பின்பற்றும் எந்த நாட்டுடனும் இணைந்து பணியாற்ற அமெரிக்கா தயாராக உள்ளது என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

ஐ.நா பொதுச்சபை கூட்டத்தில் உரையாற்றிய போதே மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்த அவர், அங்கு மேலும் தெரிவித்ததாவது,

நமது பாதுகாப்பு, வளர்ச்சி, சுதந்திரம் ஆகியவை ஒன்றோடு ஒன்று இணைந்தவை. இதற்கு முன்பு எப்போதும் இல்லாத



வகையில் நாம் இணைந்து செயற்பட வேண்டும். நாம் இன்று பயங்கரவாத அச்சுறுத்தல்களை எதிர்கொள்கிறோம்.

ஆப்கானிஸ்தானில் 20 ஆண்டு கால பிரச்சினையை நாம் முடிவுக்கு கொண்டு வந்துள்ளோம். இந்தப் போரை முடிவுக்கு கொண்டு வந்துள்ள நாம் அங்கு வெளியுறவுக் கொள்கை என்ற கதவுகளைத் திறந்துள்ளோம்.

ஆயுதங்கள் கொரோனா வைரஸை வீழ்த்தாது. ஒருங்கிணைந்த அறிவியல் மற்றும் அரசியல் சக்திகளால் கொரோனாவை வீழ்த்தலாம். சிகிச்சைக்கான வசதிகளை விரிவுபடுத்தி உலகில் உள்ள உயிர்களைக் காக்க வேண்டும். எதிர்காலத்தில் உலக சுகாதார பாதுகாப்புக்கான நிதிக்காக புதிய நடைமுறைகளை நாம் உருவாக்க வேண்டும்.

20 ஆண்டுகளுக்கு முன்னர் 9/11 தாக்குதல் நடந்தபோது இருந்த அதே அமெரிக்கா தற்போது இல்லை. இன்று நாம் சிறந்த ஆயுதங்கள், அதிக திறனுடன் உள்ளோம் என்று குறிப்பிட்டார்.



ஐ.பி.எல்:

# பஞ்சாப்பை மயிரிழையில் வீழ்த்திய ராஜஸ்தான்

இந்தியன் பிறீமியர் லீக்கில் (ஐ.பி.எல்), ஐக்கிய அரபு அமீரகத்தின் டுபாயில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற பஞ்சாப் கிங்ஸுடனான போட்டியில் மயிரிழையில் ராஜஸ்தான் றோயல்ஸ் வென்றது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடப் பணிக்கப்பட்ட ராஜஸ்தான், எவின் லூயிஸின் 36 (21), யஷஸ்வி ஜைஸ்வல்லின் 49 (36) ஓட்டங்கள் மூலம் சிறப்பான ஆரம்பத்தைப் பெற்றதுடன், லியாம் லிவிங்ஸ்டோனின் 25 (17), மஹிபால் லொம்ரோரின் 43 (17) ஓட்டங்கள் மூலம் இனிங்ஸை வேகமாக நகர்த்தியது.

பின்னர் மொஹமட் ஷமியின் 3, அர்ஷ்டீப் சிங்கின் 5, ஹர்பிறீட் பிறாரின் ஒரு விக்கெட் உள்ளடங்கலான கட்டுக்கோப்பான பந்துவீச்சால், 20 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 185 ஓட்டங்களை ராஜஸ்தான் பெற்றது.

பதிலுக்கு, 186 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பஞ்சாப், லோகேஷ் ராகுலின் 49 (33), மாயங்க் அகர்வாலின் 67 (43) ஓட்டங்கள் மூலம் வேகமான ஆரம்பத்தைப் பெற்றதுடன், ஏய்டன் மர்க்ரமின் ஆட்டமிழக்காத 26 (20), நிக்கலஸ் பூரானின் 32 (22) ஓட்டங்களுடன் வெற்றியிலக்கை நோக்கி நகர்ந்தது.

எவ்வாறெனினும், இறுதி இரண்டு ஓவர்களில் முஸ்தபிசூர் ரஹ்மான், கார்த்திக் தியாகி ஆகியோர் எட்டு ஓட்டங்கள் பெறப்படவிருந்த நிலையில், நான்கு ஓட்டங்களுடன் மட்டுப்படுத்த, 20 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்து 183 ஓட்டங்களையே பஞ்சாப் பெற்று இரண்டு ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக கார்த்திக் தியாகி தெரிவானார்.



# நீக்கப்படுகிறாரா பார்சிலோனாவின் முகாமையாளர் கூமன்?

ஸ்பானிய லா லிகா கால்பந்தாட்டக் கழகமான பார்சிலோனாவின் முகாமையாளர் கூமனைப் பிரதியிடுவதற்கான தெரிவுகள் குறித்து அக்கழகம் ஆராய்ந்து வருவதாக தகவல் மூலங்கள் தெரிவித்துள்ளன.

பார்சிலோனாவின் தலைவர் ஜோன் லபோர்ட்டா, பணிப்பாளர் சபையுடன் அவசர சந்திப்பை நடத்தியுள்ளதாகக் கூறப்படுகிறது.

பெல்ஜியம் சர்வதேச கால்பந்தாட்ட அணியின் பயிற்சியாளர் றொபேர்ட்டோ மார்ட்டின்ஸே கூமனைப் பிரதியிடுவதில் முன்னணியில் காணப்படுகின்றபோதும், பார்சிலோனாவின் முன்னாள் வீரர் ஸ்கெவி ஆகியோரும் தெரிவுகளாக உள்ளனர்.

# காயத்தாலேயே மெஸ்ஸி மாற்றப்பட்டார்

காயம் ஒன்று காரணமாகவே லியனல் மெஸ்ஸி கடந்த ஞாயிற்றுக்கிழமை போட்டியில் மாற்றப்பட்டதாக பிரெஞ்சு லீக் 1 கழகமான பரிஸ் ஸா ஜெர்மைனின் முகாமையாளர் மௌரிசியோ பொச்செட்டினோ தெரிவித்துள்ளார்.

பிரதியிடப்பட்டதில் மெஸ்ஸி மகிழ்ச்சியடைந்திருக்காத நிலையில், இடது முழங்காலில் அவர் தாக்கப்பட்டதாக பொச்செட்டினோ குறிப்பிட்டுள்ளார்.

அந்தவகையில், நேற்றைய போட்டி, வாரயிறுதி மன்செஸ்டர் சிற்றிக்கு எதிரான போட்டியில் மெஸ்ஸி விளையாடுவது சாத்தியமில்லாமல் உள்ளது.



மூன்றாவது போட்டியில்

# இங்கிலாந்தை வென்ற நியூசிலாந்து

இங்கிலாந்து பெண்கள் அணிக்கு எதிரான மூன்றாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில் நியூசிலாந்து வென்றது.

ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரின் நேற்று முன்தின போட்டியில் வென்றதன் மூலம் தொடரை நியூசிலாந்து தக்க வைத்து 1-2 என்ற ரீதியில் காணப்படுகின்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: நியூசிலாந்து

இங்கிலாந்து: 178/10 (48.3 ஓவ.) (துடுப்பாட்டம்: கதரின் பிரண்ட் ஆ.இ 49, கேட் குறொஸ் 29 ஓட்டங்கள். பந்துவீச்சு: லீ தஹுஹு 5/37)

நியூசிலாந்து: 181/7 (45.5 ஓவ. ) (துடுப்பாட்டம்: மடி கிறீன் ஆ.இ 70, அமி சட்டர்வெய்ட் 33 ஓட்டங்கள். பந்துவீச்சு: கதரின் பிரண்ட் 4/22)

போட்டியின் நாயகன்: மடி கிறீன்




விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை, 23 செப்டெம்பர் 2021, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.